

நகரத்தார் இசைக்கும்மி

அரிமதி தென்னகன்

நகரத்தார் இசைக் கும்மி

புலவரேறு
அரிமதி தென்னகன்

மணிவாசகர் பதிப்பகம்
8/7 சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை-600108.

முதல் பதிப்பு : டிசம்பர், 1998

திருவள்ளுவர் ஆண்டு : 2029

விலை ரூ. 10-00

மணிவாசகர் வெளியீட்டு எண் : 673

கிடைக்குமிடம் :

மணிவாசகர் நூலகம்

12-B, மேல சன்னதி, சிதம்பரம் - 608 001.

8/7, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600 108.

28-A, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை - 625 001.

15, ராஜ வீதி, கோயமுத்தூர் - 641 001.

28, நந்தி கோயில் தெரு, திருச்சி - 620 002.

தொலைபேசி :

சிதம்பரம் : 23069 சென்னை : 561039

மதுரை : 622853 கோயமுத்தூர் : 397155

திருச்சி : 706450

ஒளி அச்சு : லட்சுமி லேசர், சென்னை - 600 108.

அச்சிட்டோர் : பிகே ஆப்செட் பிரஸ், சென்னை - 600 013.

30/3

பதிப்பாசிரியர்

டாக்டர் ச. மெய்யப்பன்

டாக்டர் ச. மெய்யப்பன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றியவர்; திருக்குறள் இயக்கம், திருமுறை இயக்கம், தமிழிசை இயக்கம், தமிழ்வழிக்கல்வி இயக்கம் முதலிய தமிழியக்கங்களில் முழுமூச்சுடன் ஈடுபட்டு உழைப்பவர்; தமிழகப் புலவர் குழுவின் துணைத் தலைவர்; பல்கலைக் கழகங்களின் பதிப்புக்குழு உறுப்பினராகச் சிறப்பாகச் செயலாற்றி வருபவர். இவர், தமிழ் நாட்டில் பல பல்கலைக் கழகங்க்ளில் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்; பதினாறு நூல்களின் ஆசிரியர். இவர் எழுதிய 'தாகூர்' நூல் தமிழக அரசின் முதற் பரிசு பெற்றது. தமிழ் நூல் வெளியீட்டுத் துறையில் சாதனைகள் பல புரிந்த செம்மலாகிய இவர், துறைதோறும் தமிழுக்கு ஆக்கம் தரும் நல்ல நூல்களைச் செம்பதிப்பாக வெளியிடுவதைத் தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டுள்ளார். இவருடைய தமிழ்ப் பணியைப் பாராட்டிக் குன்றக்குடி அடிகளார், 'தமிழவேள்' என்னும் விருதினை வழங்கியுள்ளார். குளித்தலை கா.சு. பிள்ளை இலக்கியக்குழு, 'தமிழ் நெறிக் காவலர்' என்னும் விருதினை அளித்து இவரைச் சிறப்பித்துள்ளது. பதிப்புச் செம்மல் என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்..

அரிமதியார் தம் படைப்புகள்

1994

70. சின்னச்சின்ன விழுதுகளே

71. புள்ளிகள் [ஐ.கூ. கவிதை]

72. ஆனந்தரங்கர் அற்புதக் கதை

73. சின்னச்சின்ன விதைகள்

74. பகுத்தறிவுக் கும்மி

75. தமிழியக்கக் கும்மி

1995

76. திருக்குறள் - மனிதநேய உரை

77. நகரத்தார் இசைக் கும்மி

78. இனிய தமிழில்
பெயர்வைப்போம்!

79. சின்னச்சின்ன வீடுகட்டி

80. சின்னப் பசங்க நாங்க..?!

81. வெளிச்சத்தை விரட்டும்
இருட்டுகள் [புதினம்]

என்னை
எனக்கே உணர்த்திய
இமயமே!



"தம்பி,
நீ ஏழையன்று,
எழு!
உன்னிடம் உள்ள செல்வங்களை
அள்ளிக் கொடு.." என,
என்னை
எனக்கே உணர்த்திய
இமயம், ஐயா
குங்கிலியம்
பழ. சண்முகனார்க்கு
'நகரத்தார் இசைக் கும்மி'
எளிய, அன்புக் காணிக்கை!

நன்றியுடன்
அரிமதி தென்னகன்

தமிழகத்தை வளப்படுத்திய சமூகம்

பதிப்புச் செம்மல், தமிழவேள் ச. மெய்யப்பன்

இந்தியத் திருநாட்டில் தமிழ்நாடு பல்வகைச் சிறப்புகளைக் கொண்டது. தமிழ்நாட்டில் திருமாலின் மார்பில் இலங்கும் மதாணி போல ஒளி வீசித் திகழ்வது செட்டிநாடு. இராமநாதபுரம் மாவட்டத்தின் வடபகுதியும் புதுக்கோட்டை மாவட்டத்தின் தென்பகுதியும் இணைந்த ஒரு சிறு நிலப்பரப்பே செட்டிநாடு. செட்டிநாடு தன்னகத்தே 75 நகரத்தார் ஊர்களைக் கொண்டது. குன்றக்குடியை மையமாகக் கொண்டு 50 கி.மீ. சுற்றளவில் அமைந்தது. சற்றொப்ப ஒரு இலட்சம் மக்கள் தொகையைக் கொண்டது நகரத்தார் சமூகம்.

தமிழர் நாகரிகம் பண்பாட்டு வளர்ச்சிக்கு இச்சமூகத்தின் பங்களிப்பு காவியப்புகழ் பெற்றது.

அளவில் சிறிய ஒரு சமூகத்தின் சாதனை இங்கே இசைக்கும்மி வடிவில் பதிவு செய்யப்படுகிறது. இந்தப் பண்பாளர்களின் வரலாறு பாட்டு வடிவம் பெறுகிறது. சாதனைச் செம்மல்களின் வரலாறு இசைவடிவம் பெறுகிறது.

அண்ணாமலை அரசர்
வள்ளல் அழகப்பர்
கலைத்தந்தை கருமுத்து தியாகராசர்
தமிழிசைக் காவலர் முத்தையவேள்
அ.சி. முத்தையா
பண்டிதமணி கதிரேசனார்
தமிழ்க்கடல் ராய. சொக்கலிங்கம்
மூதறிஞர் வ.சுப. மாணிக்கனார்
கவியரசு கண்ணதாசன்
அழ. வள்ளியப்பா
சக்தி வை. கோவிந்தன்
சிந்தனையாளர் பழ. கருப்பையா

முதலிய பெருமக்கள் இந்தச் சமூகத்தின் புகழ்ச்செல்வர்கள்.

30/3

இவர்கள் திருப்பெயர்கள் இசைக் கும்மியில் அழுத்தமாகப் பதிவாகியுள்ளது. பாட்டுருவம் பெற்ற நல்ல பொருள் காலத்தை வென்று வாழும் என்பது இலக்கிய வரலாறு கூறும் உண்மை. இந்த வகையில் இந்தக் கும்மியும் தமிழ்ச் சமூகத்தின் ஒரு பகுதியினரின் ஆவணமாக என்றும் நிலைக்கும்.

கும்மி = சிற்றிலக்கிய வகைகளில் ஒன்று. நாட்டுப் புறங்களில் இன்றும் கும்மி பாடப்படுகிறது. வள்ளலாரும் பாரதியாரும் கும்மி பாடல்கள் பாடியுள்ளார்கள். இசையோடு கலந்திருப்பதால் இதன் செல்வாக்கு மிகுதி, பரவலும் மிகுதி. பாடப் பாட பண் என்னும் வழியில் நகரத்தார் கும்மியும் பண்சுமந்த பாடலாய்த் தமிழ்கூறும் நல்லுலகெங்கும் தழைக்கும்.

நகரத்தார் கோயிலைச் சார்ந்த குடிகள். இவர்கள் கோத்திரம் ஒன்பது கோயில் குடிவழிகளைக் கொண்டது. ஒன்பது கோயில்களில் ஏழுகோயில் வரலாறு அறிஞர் **மா. சந்திரமூர்த்தி** அவர்களால் எழுதப்பெற்று சிறப்பாக வெளிவந்துள்ளது. நகரத்தார் திருப்பணி, கோயில் கலைப்பாணி இந்நூல்களில் விரிவாக ஆராயப்பெற்றுள்ளது.

1. **இரணியூர்க் கோயில்**
2. **பிள்ளையார்பட்டி**
3. **இலுப்பைக்குடி**
4. **மாத்தூர் கோயில்**
5. **வயிரவன் கோயில்**
6. **நேமம் கோயில்**
7. **சூரக்குடிக் கோயில்**

ஆகியவை அந்த ஏழுகோயில்கள். நகரத்தார் சமூகம் பற்றிய செய்திகளைப் பதிவு செய்யும் முயற்சியில் இது முதல் முயற்சி.

மணிவாசகர் பதிப்பகம் **நகரத்தார் கலைக்களஞ்சியம்** என்னும் பெருந்திட்டத்தில் 500 பக்க அளவில் பல்லாயிரக் கணக்கான செய்திகளைக் கொண்ட பெருநூலை செய்திக் களஞ்சியமாய், கருத்துக் கருவூலமாய் வெளியிட்டுப் பெருஞ்சாதனை நிகழ்த்தியது. பலநூறு சமூகங்களைக் கொண்ட இந்திய சமூகத்தில் நகரத்தார் ஒன்றுக்குத்தான்

சமூகக் களஞ்சியம் வெளியாகி உள்ளது. இதனை வெளியிட்ட தனிப் பெருமை மணிவாசகர் பதிப்பகத்தின் தனி உரிமையும் உடைமையும் ஆகும்.

நல்லதொரு இசைக் கும்மியை நாட்டுக்கு வழங்கியவர் சிந்தனைக் கவிஞர். அரிமதி தென்னகன்.

1. தமிழியக்கக் கும்மி
2. பகுத்தறிவுக் கும்மி
3. மெய்யப்பர் கும்மி

வரிசையில் நகரத்தார் இசைக்கும்மி இப்பொழுது வெளிவருகிறது. ஆழ்ந்த தமிழ்ப் புலமையும் இசையறிவும் நிரம்பியவர். இந்தத் தலைமுறையில் கும்மி இலக்கியம் பாடுவதில் இவருக்கு நிகர் இவரே. தமிழ்ச் சொல் அறிந்து அவற்றின் நுண்பொருள் உணர்ந்து இசைக்கேற்ற வடிவம் தருவது இவர் கும்மியின் தனிச்சிறப்பு.

தமிழுக்குப் புதுவை தந்த கொடைகள் பல. அந்த நல்லறிஞர் குழுவில் அரிமதி தென்னகனாரும் சிறப்பிடம் பெறுகிறார். இவர் பகுத்தறிவுச் சிந்தனையாளர். கொள்கைக் குரிசில். சங்கக் கவிஞரனைய தூயர். பெருமித வாழ்வினர். படைப்புகளால் பேரும் புகழும் பெற்று, புதுவைக்குப் புதுப்புகழ் சேர்க்கும் அரிமதி தென்னகனார் பாவேந்தர் பரம்பரையில் இன்று நம்மோடு வாழும் நற்கவிஞர்.

மணிவாசகர் பதிப்பகம்

பாரதியார்
பாரதிதாசன்
சுந்தர சண்முகனார்
திருமுருகன்
ஜான் லூயி
குமாரசாமி
பக்தவச்சல பாரதி

முதலிய புதுவைத் தமிழ்ப் பெருமக்கள் அனைவர் நூல்களையும் வெளியிட்ட ஒரே பதிப்பகம். சிறந்த இசை வடிவத்தில் அமைந்த இந்தக் கும்மி நகரத்தார் இசையினைத் திசைதோறும் பரப்பும்.

படைப்புரை
வரலாற்று வண்ணம்

இதோ..

என், படைப்புரை எழுதத் தொடங்குகிறேன்.

ஒரே, சிறு மாத்திரை நேரம்...

கண்கள் பனிக்கின்றன!

'நகரத்தார் இசைக் கும்மி'யை நாமா, படைத்தோம்?

அந்த அரிய வாய்ப்பு வந்ததெப்படி?

'உம்மால் முடியு'மென, ஓர் அருள் நெஞ்சம் உணர்ந்ததெப்படி?

வியப்பென்றால் உண்மை,
வினா என்றால் விடை இதுதான் : தமிழவேள் ச.. மெய்யப்பனார்தம் பாராட்டும் மனம்; போற்றும் உணர்வு; ஏற்றும் அருள்!

இந்த அருள் நிலாவிற்கு என்னை அறிமுகப்படுத்திய பேராசிரியர் **மது ச. விமலானந்தம்** அவர்களையும் மனக் கண் காண்கிறது.

நெஞ்சம் நன்றியால் நனைகிறது!

'தமிழ்த்திரு' ஐயா மெய்யப்பனார்தம் பாராட்டு விழா புதுச்சேரியில் 13-3-94 ஆம் நன்னாள் நடைபெற்றது.

ஏற்புரையில்,

"அரிமதியார் பகுத்தறிவுக் கும்மி, தமிழியக்கக் கும்மி, நகரத்தார் இசைக் கும்மி என்னும் மூன்று கும்மிகளைப் படைக்க வேண்டும்" எனத் தம் விருப்பத்தை விழா மேடையில் அறிவித்து என்னைப் பெருமைப்படுத்தினார்.

மூன்றையும் நிறைவோடு படைத்தேன்.

இதோ, 'நகரத்தார் இசைக் கும்மி' உங்கள் பார்வையில்; உணர்வோ, கைகளாகிக் கும்மி கொட்டத் துடித்துக் கொண்டிருக்கும்!

நகரத்தார் பற்றிய அனைத்துச் செய்திகளும் ஆதார நூல்களிலிருந்து கொய்யப் பெற்றவை!

தமிழவேள் ச. மெய்யப்பனார் வகைப்படுத்தியும் நெறிப்படுத்தியும் எழுதிக் கொடுத்த குறிப்புகளிலிருந்து கோக்கப்பெற்றவை!

அரிசியில் யானையைச் செதுக்கும் பணியே, இப்பணி!

எனவே, சொல்லப்பெற வேண்டியவை எல்லாமே இதில் உண்டு எனும் வாய்ப்பைப் பெறமுடியாது.

ஓடும் கங்கை வெள்ளத்தில் 'உள்ள'ங்கை அளவே அள்ள முடிந்தது.

குறைகளைச் சுட்டின், திருந்துவேன்; திருத்துவேன்!

இவையெலாம் இருந்திருக்க வேண்டும் என எவர் அறிவிப்பினும் உறுதியாக அவற்றை இணைப்பேன்.

இப்பணியில், எனக்குத் தூண்டுதலாக இருந்த இளவல், **பாசறைப் பாவலர் தி. பழநிச்சாமிக்கு** நன்றி கூறுகிறேன்.

நிறைவாக, என்னை நம்பி இப்பொறுப்பினைத் தந்து ஆட்கொண்ட தமிழவேள் ச. மெய்யப்பனார் அவர்கள்,
"உதித்தாளும் ஞாயிறுபோல் ஒளிசிறந்து உயர்ந்து வாழி" என மூதறிஞர் வ. சுப. மாணிக்கனார் பின் நின்று வாழ்த்துகிறேன்.

அரிமதி தென்னகன்.

நகரத்தார் இசைக்கும்மி

படைப்பில் காணும் செய்திகள்,
வரலாற்றுக் குறிப்புகளுக்கான
ஆதாரங்கள் :

1. செட்டி நாடும் செந்தமிழும்
'சோமலெ'

2. நகரத்தார் புகழ்மாலை
தொகுப்பு :
பேராசிரியர், முனைவர் ச. மெய்யப்பன்.

3. நகரத்தாரின் அறப்பணிகள்
ஆய்வேடு - முனைவர் (நவம்பர் - 1993)
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
நா. வள்ளி
இராமசாமி தமிழ்க்கல்லூரி, காரைக்குடி,

மற்றும்

4. தமிழவேள் முனைவர்
ச. மெய்யப்பர் அளித்த
எழுத்துக் குறிப்புகள்

நன்றி கூறும்

அரிமதி தென்னகன்

கொட்டுகள்		பக்கம்
அ.	விழி மொழி வேண்டல்	13
ஆ.	ஏழும், ஒன்பதும்	14
இ.	மூலம் அறிந்தெழுவோம்	17
ஈ.	வளர்புகழ் நகரத்தார்	26
உ	பாடல்பெற்ற மாமரபு	38
ஊ.	பாரதி மரபினர்ப் பாடலும் பெற்றோம்	43
எ.	பேறென நூல்பல பெற்றோம்	50
ஏ.	இரட்டைக்கிளவில் இருபணிகள்	52
ஐ.	புகழ் மாமணிகள்	.75

நகரத்தார் இசைக்கும்மி

விழிமொழி வேண்டல் - (அ)

நாமலர் பூத்த புதுமணமே! - முதல்,
நாமகள் பெற்ற மொழி இனமே! - கும்மிப்
பாமலர் கூட்டித் தொடுத்திடவே - அடி
பற்றினேன் வாழ்க, நீ என்மனமே! (1)

முத்த மொழிகளுள் முத்துமொழி - மொழி
முத்துக் கடலினுள் முத்தமொழி - மானம்
காத்த மொழியாம் இருவிழியே! - அன்பு
காட்டுக கும்மி இசைவழியே. (2)

'உயிர், மெய்'யப்பனார் சொல்

நன்நக ரத்தவர் தொன்மைவழி - அவர்
நாட்டி நிலைப்பவை, நன்மைபொழி - உயர்
பன்முக ஊற்றெனல் பாடிடவே - கும்மிப்
பாட்டினில் வா,நலம் கூடிவே! (3)

ஏற்றேன் நகரத்தார் ஏற்றபுகழ் - ஏற்கும்
இன்னிசைக் கும்மியைப் பாடுதற்கே - எழில்
போற்றி வளர்ப்பதுன் நற்கடனே - கும்மி
பொய்கையாய் ஆகுக பொற்புடனே! (4)

கோட்டை நகரத்தார் கொள்புகழை - இசைக்
கும்மியில் பாடி, உனைஉயர்த்தும் - என்றன்
வேட்கை நிறைவுற வாழ்த்துகவே - கும்மி
வெற்றி எனஉல கேத்துகவே! (5)

சண்முக னார்.பழ. பெற்ற,தவன் - நெறி
சார்ந்த வளர்திரு வுற்றமகன் - மழைத்
தண்முகத் தார்,'உயிர் மெய்'யப்பனார் - சொல்லைத்
தாங்கி வரும்கும்மி காத்தருளே! (6)

ஏழும், ஒன்பதும் - (ஆ)

(வேறு)

வாருங்,கடிக் கும்மி கொட்டிடவே - இசை,
வண்ணம் அளந்து,வான் எட்டிடவே
சேருங்கடிக், கும்மி தட்டிட வே,கோட்டைச்
செட்டிமார் சீர்,திசை தொட்டிடவே! (7)

பூம்புகார் என்னும் நகரத்தினர் - அற்றைப்
பொன்வர லாற்றின் பழைமையினைத்
தோம்...தோம் எனத்துள்ளிப் போற்றிடு வோம்,கும்மி
தோகைய ரே,கொட்டி ஏத்திடுவோம்! (8)

ஆச்சி மீனாட்சிப் பெயர்த்தியர்

குங்கிலி யம்,பழ. சண்முகனார் - பெற்ற
கோமகன் ஒப்பவர் மெய்யப்பனார்
தங்க மயில்களே! அன்னார் பெயர்த்தியர்
தம்மை அழைத்திசை கூட்டுங்களே! (9)

ஆச்சி,மீ னாட்சிப் பெயர்த்தியராம், - மீனாள்
அன்பு மகளிர் இருவரையும்
பூச்சர மாகச் சிரிக்கும் நிலவுகாள்
போயழைப் பீர்,கும்மி கொட்டுதற்கே. (10)

ஆற்றங் கரைமணல் மாலைநேரம் - தென்றல்
அள்ளி வரும்,மணப் பூவின்பதம்
போற்ற,விண் மீன்கள் விழிசிமிட் டும்,நிலை
பூவையீர், கும்மி இசைஎழுக! (11)

பொங்கும் முரசெனக் கும்மிகொட்டு - இசை
புல்லாங் குழலாய்ப்பின் ஓங்குகவே
எங்கும் நகரத்தார் ஏற்ற புகழ்கேட்கும்
இன்பம் எழுந்திடக் கும்மிகொட்டு! (12)

ஏழு நகரத்தார் நங்கையிரே! - கும்மி
எட்டுத் திசையும் பரவட்டுமே
வாழும் திருக்கோயில் ஒன்பது கொண்டோங்கும்
வண்ண மரபீர்,கை தட்டுகவே! (13)

திருக்கோயில் ஒன்பது

சீர், இளை யாத்தங் குடிக்கோயிலீர் - கோடை
சித்திரைத் திங்கள் நிலாமுகத்தீர்
போர், விளை யாட்டெனும் .மாமற வர்,நிலப்
பூவையீர் கும்மி யடித்திடுவீர்! (14)

மாற்றூர், ஐ நூற்றீசர் போற்றிடுவீர் - அறம்
மாண்பெனும் மாமறை ஏற்றிடுவீர்
போற்றுவோம் வாருங்கள் பூக்கும் புகழினைப்
பொற்பினைக் கும்மியிற் பாடுவமே! (15)

ஏழிசை இன்பம் எதிரொலிக்க - இனம்
ஏறி உயர்ந்திட ஏணியென
வாழும் நலத்தீர் வயிரவன் கோயிலீர்
வண்ண இசைக்கும்மி கொட்டுவமே! (16)

ஆட்கொண்ட நாதர்தாம் ஆட்சிசெயும் - கோயில்
    ஆர்ந்த இரணியூர் நங்கையிரே!
போட்டியிட் டே,கும்மி கொட்டுவ மே,கேட்டுப்
    புல்லரித் தோர்,மனம் பற்றுவமே! (17)

பிள்ளையார்ப் பட்டிப் பெருநலத்தீர் - வீழ்த்தும்
    பேதைமை யற்ற திருவுளத்தீர்
துள்ளி எழுமெழில் காட்டி இருகைகள்
    தோற்றும் சிவப்புறக் கொட்டுவமே! (18)

வெற்றிகொள் சோழீசர் வீற்றிருப்பார் - உடன்
    வேல்விழி யார்,எழில் நாயகி, கை
பற்றிடு வார்,உயர் நேமம் திருக்கோயில்
    பாவையி ரே,கும்மி கொட்டுவமே! (19)

வான்தோன்றும் முன்னர், வடிவுடைய - மங்கை
    வையகம் காக்க இலுப்பைக்குடி
தான்தோன்றும் ஈசர் உடனிருக் கும்,கோயில்
    தன்மானம் மிக்கீர்,கை கொட்டுவமே! (20)

வேரினைக் காக்கும் விழுதுகளாய்த் - தோட்ட
    வேலிக ளாய், முன்னோர் காண்நெறியைச்
சூரைக் குடிக்கோயில் மாங்குயில் காள்,பாடிச்
    சுட்டெழுத் தாக நிலைத்திடுவோம்! (21)

கண்டீசர், காமாட்சி அம்மையுடன் - விழி
    காட்டும் அருளால் உலகளிக்கக்
கண்ட, வே லங்குடிச் சேயிழை யீர்,கும்மி
    காட்டும் இலக்கணம் காண்குவமே! (22)

தூக்கி நிறுத்திய ஏரெனவே - எழில்
தோற்றிடும் (7)ஏழு நகரத்தராய்
ஆக்கும் இனமெனப் போற்றற் குரியார்தம்
ஆற்றல்... திறன்...கொடை ஏத்துவமே! (23)

பாடிப் பரவுவோம் பண்ணிசைப்போம் - கலை
பண்பாடு போற்றும் நகரத்தாரைக்
கூடியே போற்றுவோம் கும்மி இசை, நாட்டுக்
கோட்டையார் சீரைக் குவிக்கட்டுமே! (24)

மூலம் அறிந்தெழுவோம் - (இ)

(வேறு)

நம்மை அறிந்திட வேண்டுமடி - நம்மை
நாமே உணர்ந்திடத் தூண்டுமடி - உயர்
செம்மை திறம்பா வணிக மரபெனும்
சிந்தை, பூ மிப்பந்தைத் தாண்டுமடி. (25)

பட்டினம் வாழ்ந்த மரபினர்நாம் - புதுப்
பட்டினம் கண்ட திறத்தினர்நாம் - அன்றே
பட்டினப் பாலை படைத்த பெருமையால்
பண்பாட்டைத் தூக்கிப் பிடித்தவர்நாம். (26)

யார், நகரத்தார்? (வேறு)

பூம்புகார் தானே,நம் மூலநகர் - கடல்
பொங்கித் தனக்குரித் தாமெனவே - அன்று
வீம்புடன் கொண்டத னால்,நகர்ந்தே - புது
வெற்றித் திருநகர் கண்டவர்நாம். (27)

(வேறு)

மண்ணில் முதன்முத லாய்,நகரம் - கண்ட
முத்த இனமெனல் நாமறிவோம் - அதை
எண்ணி நகரத்தார் என்று பெயர்கொண்ட
ஏற்ற வரலாற்றை ஏற்றவர்நாம். (28)

சேர்த்த பொருளினில் சிக்கனத்தார் - பிறர்
செழிக்கக் கொடை'அளி' நற்குணத்தார் - கோடை
வேர்த்த உடல்,படு தென்ற லென,உற
வானவர் இன்புறச் செய்பதத்தார். (29)

சிக்கனப் பண்பினால் செட்டியென்பார் - 'எட்டி'
சீர்மிகு பட்டச் சிதைவுமென்பார் - அன்றே
திக்கறி யாக்,கடல் மேவி வணிகத்தில்
தேர்ந்தவர் நாமெனல் வேரடியோ! (30)

செல்வம் விளைக்கும் வணிகஇனம் - நாட்டின்
செம்மை சிறந்திடச் சேர்க்குமினம் - துணை
இல்லை என,அச்சம் கொள்ளாச் செயல்திறம்
ஏற்றனம் என்றே உலகறியும். (31)

மீனைப் பிடித்துத் தருவதுதான் - வாழ்வில்
மிஞ்சும் வறுமையை நீக்கிடுமா? - எனச்
சீனப் பழமொழி போலே,மீன் பற்றிடும்
செப்பரி தாம்,வழி கற்றவர் நாம். (32)

செட்டி நாட்டு எல்லை

வெள்ளாற்றின் தெற்கு நமதுநிலம் - பாரி
வாழ்ந்த பறம்பின் கிழக்குப்புலம் - அன்னை
உள்ளமாம் வைகை வடக்குத் திசை, வங்க
ஓங்கு கடலொலி மேற்கின்இசை. (33)

காற்றால் கடலால் கலங்கியதால் - பின்னர்
கட்டினோம் வீட்டினைக் கோட்டையென! - பெற்ற
நேற்றையப் பட்டறி வால்,நிகழ் காலத்தை
நேருறக் கண்டு நிமிர்ந்தவர்நாம். (34)

இதய உருப்பென...

காற்றினை மூச்சென மாற்றுகிற - பிடிக்
கையள வாம்,இத யத்திலுறும் - இரு
போற்றும் *உருப்பெனச் செந்தமி ழை,நீறு
பூசும் சிவநெறி கொள்பவர்நாம். (35)

வாணிகம், தொண்டு மூக்கினிரு - உயிர்
வாயில் எனக்கொண்டு வாழ்பவர்யார்? - நலம்
பேணும் அறத்தின் வகைஎலாம் ஆற்றிடும்
பெற்றியர் யார்?நக ரத்தவரே! (36)

பூங்குன்ற நாடு பறம்புநாடு - கானப்
பேரெயில் ஒக்கூர்நம் நாடுகளே - என
ஓங்கு புகழோடு சங்க,கா லத்தில்நாம்
உற்ற வரலாற்றை யார் மறுப்பார்! (37)

மாமழை நாட்டில் பிறந்தவர்நாம் - தீமை
மாய்க்கும் மறவர் நிலத்தினிலே - வானத்
தூமழை போல்வந்து சேர்ந்து செழிப்பினால்
தூக்கி நிறுத்திய தூயவர்நாம்! (38)

(* இரு உறுப்பு - 1. Auricle, 2. Ventricle)

மன்னவர் பின்னவர்

மன்னவர் பின்னவர் என்பதனால் - வேந்தர்
மாளிகை ஒக்கும் அரண்மனையை - ஆண்ட
தென்னவர் போல்கட்டி ஆண்டவர் நாமெனத்
தேயம் அறிந்தது உண்மைநிலை. (39)

ஆட்சித் திறத்தால், கொடைஅறத்தால் - நாட்டை
ஆண்டவர் தம்மைநாம் வென்றதனால் - அந்த
மாட்சிமை தன்னைத்தான் மன்னவரும், பின்னர்
மாற்ற மிலையெனப் போற்றினரோ! (40)

ஒன்பது கோயில் பிரிவினராய் - மண
ஒப்பந்தம் கொள்ள வகுத்தனரே - அன்றித்
தென்னா டுடைய சிவனையே போற்றிடும்
திண்மையினால், என்றும் 'ஒன்றினமே!' (41)

புலமைப் பிறப்பிடம்

ஒக்கூர்மா சாத்தியார் நம்மகளே - பாரி
ஓம்பிய மாமலை நம்பறம்பே - புகழ்
மிக்க புலவர் கபிலர் உலவியே
மேன்மை விளைத்ததும் நம்மலையே! (42)

தெள்ளு தமிழ்க்குறள் கொண்டவுரை - நூலில்
தேர்ந்த உரை,பரி மேலழகர் - செய்த
அள்ளும் உரையன்றோ! அவ்வுரை யாளர்தம்
அன்னை நிலமது ஒக்கூரன்றோ! (43)

ஒக்கூர்மா சாத்தன் நமதுறவே - சங்கம்
ஓங்கிய காலத்து நம்தொடர்பே - அன்னை
ஒக்கூர்மா சாத்தியார் நம்மர பே,எனும்
ஒன்றென்ன... கோடி நமதுயர்வே! (44)

ஒன்றே உலகென ஞாலத்திலே - முதல்
ஓங்கி முழக்கிய பூங்குன்றனார் - புது
நன்றாம் அறத்தினை 'யாதுமூர்' என்றவர்
நம்மின மூத்தவர் என்போமடி. (45)

யாதும்ஊர் என்ற உயர்மனத்தார் - இங்கே
'யாவரும் கேளிர்' எனஉரைத்தார் - புதுப்
பாதையர் பூத்தநம் பூங்குன்ற மாம்,மகி
பாலனார்ப் பட்டியை வாழ்த்துவமே! (46)

நாயன்மாருள் நம்மவர்

நாயன்மார் நால்வர் நகரத்தவர் - இதை
நானிலம் நன்றே அறியட்டுமே - சிவ
நேயர் அமர்நீதி காரைக்கால் அம்மையார்
நிற்கும் வரிசையைக் காட்டுவமே! (47)

தூயவ ராம்,மூர்த்தி நாயனாரும் - நேர்மைத்
தொண்டர் இயற்பகை நேயனாரும் - அம்மை,
தாயென வாழ்ந்த நெறியினர் யாவரும்
தம்நிகர் இல்லா நமதினமே! (48)

வாழ்ந்து நெறிகண்ட பட்டினத்தார் - நம்மோர்
வாழ்ந்தநற் பூம்புகார்ப் பட்டினத்தார் - என்றும்
தாழ்ந்த வரலாற்றைக் காணா நகரத்தார்
தன்மை தொடர்ந்திட வேண்டுவமே! (49)

கண்ணகி வழியினர்

கற்புக் கனலியாம் கண்ணகியார் - அன்புக்
கன்னிய ரே,நந்தம் முப்பாட்டியின் - பாட்டி;
பொற்புடைப் பாட்டிக்கே ‘அப்பத்தா’ என்றிடில்
பொய்யிலை; உண்மையுள் உண்மையன்றோ! (50)

கண்ணம்மை கண்ணாத்தாள் என்னும்பெயர் - வைத்துக்
காலமெ லாம்,அவள் மாமரபை - நாமே
உண்ண மறக்கினும் போற்றி வருவதே
உண்மை எனக்காட்டும் சான்றுகளே! (51)

பாதச் சிலம்பொலி கேளுங்கடி - சோழப்
பாவையாம் கண்ணகிக் காற்சிலம்பின் - வழி
ஓதி ஒலிப்பதும் ‘கற்புக் கனலி, உம்
உன்னும்வேர்’ என்பதும் கேட்குமடி. (52)

ஆதிரை நம் அன்னை

பாரகம் எல்லாம் பசிப்பிணியே - நீங்கப்
பார்ப்போமென் றார்த்த முதல்மகளாய்ச் - சோறு
சீரக மே,நிறை வாகச் சுரபியில்
சேர்த்தவள் ஆதிரை நம்மகளே! (53)

மாமணி மேகலை யாள்,பணியே - வெற்றி
மல்க அமுத சுரபியிலே - சோறு,
தூமணி ஆதிரை இட்டத னால்,அன்றோ
தொட்ட மணற்கேணி ஆனதன்றோ! (54)

மாதவி மாமகள் பெற்றமகள் - மணி
மேகலை சீர்வர லாற்றினையே - தந்த
ஆதவன் சீத்தலைச் சாத்தன் கொடிவழி
ஆனவர் நாமே நிமிர்வோமடி. (55)

சங்க இலக்கியப் பாவலர்கள் - பலர்
சந்தனக் காடென நம்மினத்தில் - அன்று
பொங்கிப் பொலிந்ததைக் காலம் உணர்ந்ததைப்
பூரிப் புடன், சொல்லிப் போற்றுவோமே! (56)

நம் தாயகம்

நாகநா டன்றோநம் தாயகமாம் - சோழன்
நாடி அழைத்துமே பூம்புகாரில் - குடி
போகவைத் தானெனும் பண்டை வரலாற்றைப்
பூவையீர் நாமன்றிச் சொல்பவர்யார்? (57)

தீயன் ஒருசோழன் நம்மினத்துத் - தங்கத்
தேரெனும் கற்புத் திருவிளக்கை - அறம்
தீய '<u>அணைத்தமை</u>' தீதென நம்மவர்
தீக்குளித் தாருயர் மானத்தினால்! (58)

மான இனம்

மான உணர்வின் மறுமலர்ச்சி - என
மல்கித் தழைப்பது நம்மினமே - மனக்
கூனல் அறியா நகரத்தி னாரெனும்
கொற்றம் விரியட்டும் வானெனவே! (59)

பெண்ணையும் கொன்று, பெரிதெனவே - மானப்
 பெட்பினால் பாண்டியன் ஆணைப்படித் - தங்கள்
மண்ணின் மரபென ஏழு திருக்கோயில்
 மக்கள் தலைகள் கொடுத்தவர் நாம்! (60)

ஒப்பிலா ஒக்கூர்

எட்டா வது,தலை எங்கெனவே - மன்னன்
 எண்ணியே கேட்டிட ஒக்கூரினார் - உடன்
தட்டாமல் தம்தலை தந்த வரலாற்றின்
 தன்மானச் சீர்மையைப் போற்றுவோமே! (61)

மன்றில் முதல்மரி யாதைபெறல் - ஒக்கூர்
 மாதவர்க் கே,எனும் காரணத்தை - இன்றும்
தென்றல் நினைத்தே குளிர்ந்த தெனக்கூறித்
 திக்கெட்டும் நம்புகழ் ஓதுவமே! (62)

சுந்தர பாண்டியன் சொற்படியே - முன்னோர்
 சொல்லி, *எண் ணாயிரம் புள்ளியினர் - அன்று
வந்துமே பாண்டிய நாட்டுக் குடியென
 வாழ்ந்த திருநகர் காரைக்குடி. (63)

கொடியும், மாலையும

தங்கக் கொடிகட்டி மாளிகையின் - உச்சி
 தண்ணில வுப்,பூவைச் சூடவைத்தோம் - அன்றே,
சிங்கக் கொடிகட்டி வாழ்ந்திருந் தோம்; மாலை
 சீரகப் பூவால் தொடுத்திருந்தோம். (64)

* எண்ணாயிரம் தலைக்கட்டு

பூம்புகார் விட்டுப் பறந்துவந்தோம் - மானம்
பூக்கும் மறவர்மண் பார்த்துவந்தோம் - காடு
பாம்பு, விலங்கினைத் தாமழித் தே,எழில்
பட்டினம் போல்,நகர் பார்க்கவைத்தோம்! (65)

கோயிலை வைத்துக் குழுவமைத்தோம் - அறக்
கொற்றங்கள் வாழ்வினில் சூழவைத்தோம் - உயர்
வாயிலை மட்டும் திறந்துவைத் தோம்,கொடை
வாங்குவார் வாழ்வை மலரவைத்தோம். (66)

வணிக வழி

வாணிகம் நம்மோர் குலத்தொழிலே - அற
வாழ்க்கைதான் நம்மினத் தார்,வழியே - என்றும்
காணிடம் எங்கணும் கல்வி வளர்த்துமே
கண்திறப் போம்,எனல் நம்உயிர்ப்பே! (67)

'மன்னவர் பின்னவர்' என்றிடவே - வெற்று
மாளிகை மட்டுமோ கட்டிவைத்தார் - கொடை
முன்னவ ராய்,அறம் வாழவைத் தார்,என்றும்
முத்தமிழ்க் காப்பில்,தம் வாழ்வைவைத்தார். (68)

கோழிகள் ஓடிடத் தம்செவியின் - தங்கக்
குண்டலம் வீசிச் சிரித்தவர்தாம் - இளம்
தோழிய ரே,நந்தம் முப்பாட்டி மாரெனத்
தூக்க நிலையிலும் பாடிடுவோம். (69)

முருங்கையென....

வெட்டி, நட் டாலும் முருங்கைமரம் - நிழல்
வீதி தவழக் கிளைத்தெழல்போல் - கோட்டைச்
செட்டிமார்க் கூட்டம் தழைத்தெழும் என்றிடும்
சேதி உலகை எழுப்புகவே! (70)

தென்னைபோல்....

மட்டை உதிர்த்துப் படியாகி - ஏறும்
மாந்தன் உயர,மேல் ஏறுதற்கு - வழி
கட்டித் தருகிற தென்னை மரமெனக்
காணும் இனம்யாம் எனஎழுவோம்! (71)

ஏறும் பொழுதினில் கீழிருப்பார் - தமை
ஏற்றி உயர்த்தி உயர்பவர்கள் - கீழ்மைச்
சீறல் அறியாச், சிரிப்பே முகத்தினர்
செய்பணி எங்கும் வளரட்டுமே! (72)

வளர்புகழ் நகரத்தார் - (கூ)

(வேறு)

*ஏழுபத் தைந்தூரில் வாழும் இனத்தினர்
இல்லாத நாடில்லை என்னுநிலை
ஊழென ஒய்ந்து கிடக்கும் மரபிலை
உற்ற தொழிலைப் பழிப்பதிலை! (73)

* 7 X 10 + 5 = 75 ஊர்

எத்தனை வீட்டார்!...

ஆலம்பட் டார்,வீட்டின் ஆயிழை யீர்,வாரும்
அன்பே சிவமெனும் ஆன்மிகத்தார்
சீலம் உயர்த்தி, இசைக்கும்மி பாடியே
செந்தமிழ்ச் சீரை உயர்த்திடுவோம்! (74)

ஆற்காட்டார் வீட்டுக் குலவிளக் கே,வாராய்
அற்றைப் புகார்,நக ரத்தவர்தம்
கொற்றம் விளங்கிக் கொடியாய்ப் பரவிடும்
கோலம் பொலியக்,கை கொட்டிடுவோம்! (75)

ஆலங் குடியார் அகத்துவாழ் அன்னங்காள்,
ஆச்சியும் காண அழைத்துவாரும்
ஞாலம் உயர்த்தும் வணிக நகரத்தார்
நற்புகழ் போற்றிக்கை கொட்டிடுவோம்! (76)

கீரணிப் பட்டியார் வீட்டுக் கிளிகளே
கேளிர்தாம் எல்லோரும் என்றுலகை
ஓரணி யில்,முதல் கண்டபூங் குன்றனார்
ஓங்கு வழியென ஆர்த்தெழுவோம்! (77)

கூடி இணைந்தே கொரட்டியார் தம்வீட்டுக்
கூவும் குயிலாய் இசைத்திடுவோம்
கோடி வரினும் 'பழியெனில் போ'எனும்
கொள்கை மரபெனப் போற்றிடுவோம்! (78)

சேந்தணி யார்,வீட்டுச் செந்தா மரைகளே
சீர்நக ரத்தார் புகழிசைப்போம்
மா்ந்த இனத்தின்,நன் முச்சாம் வணிகம்செய்
மா்,மர பென்றே இசை ஒலிப்போம்! (79)

வாணாள் முழுதும் அள்ளிக் கொடுத்திடும்
வள்ளல் மரபினர் யாமெனவே
ஓணாங் குடியினர் ஓவியங் காள்,வாரும்
ஒன்றாகக் கும்மி அடித்திடுவோம்! (80)

சங்கமரபினர்

சங்க மரபெனக் கொட்டுக வே,அறம்
சார்ந்த மரபெனக் கொட்டுகவே
தங்க மரபெனக் கொட்டுக வே, தமிழ்
தாங்கு மரபெனக் கொட்டுகவே! (81)

தெய்வதம் போற்றும் இனமென வே,கொட்டு
தேர்ந்த நெறியினர் என்றுகொட்டு
பொய்மதத் தார்,என வே,வெறி கொண்டிடும்
புன்மை இலாரெனக் கும்மிகொட்டு! (82)

வெற்றிவிளைப்போர்

தொட்ட பணியை முடித்திடு வோம்,திருத்
தொண்டுகள் கோடி விதைத்திடுவோம்
திட்டமிட் டால்,அவை வெற்றி பெறும்வழி
தேர்ந்துமே வெற்றி விளைத்திடுவோம்! (83)

வெற்றுரை என்பதை யாமறி யோம்,கோல
வீர நடிப்பை மதித்தறியோம்
புற்றென நெஞ்சினைப் பெற்றறி யோம்,வெறும்
போதனை செய்வதைக் கற்றறியோம்! (84)

(வேறு)

பூவெனி லோ, இந்த ஞாலமதை - அதில்
பொங்கு பசுந்தேனாய் நாமிருப்போம் - சிறு
நாவெனி லோ, இந்த ஞாலமெனில் - பொருள்
நல்கும் உயர்சொல்லாய் நாம்செழிப்போம்! (85)

மக்கள் தொகையில் குறைந்தவர்தாம் - உயர்
மாண்புடை யார்,தொகை ஓங்குமன்றோ! - என்றும்
ஒக்கல் உயரத் துணைபுரியும் - இனம்
ஓம்பு நலம்,உயிர் ஆகுமன்றோ! (86)

வள்ளுவர் சொன்ன பணிவுடைமை - காட்டும்
வண்ணமோர் சின்னம் வடிப்பதெனில் - நேரில்
உள்ள திருமலை நம்மினமே - எனும்
ஓசையும் மெல்ல அரும்பிடுமே! (87)

பனித்துளிப் பணிவு

வானை அளப்பினும் மாமலையை - உள்ளே
வாங்கும் பனித்துளி போலடக்கம் - கொண்டும்
தானை மறவர்தம் வீரமனம் - பெற்ற
தந்நிக ரற்ற,நல் வாழ்வினர்நாம்! (88)

வந்தபின் னோ,பழிக் கஞ்சிடுவோம்? - நினை
வாக வருமுன் தடுத்திடுவோம் - வாழும்
எந்த,பு ராண இலக்கியமும் - போற்றும்
இக்குணத் தில், நாமே மிஞ்சிடுவோம்! (89)

குன்றக்குடிக்கேன் குடி வந்தார்?

குன்றக் குடியினில் வேல்முருகன் - பண்பு
குன்றாக் குடியினர் சுற்றியுமே - உளார்
என்று குடிபுகுந் தானெவே - சொல்லும்
ஏற்றம் மிகுந்த இனத்தவர்நாம்! (90)

முன்று கடலும் இமயமெனும் - உயர்
மூத்த மலையுமாய் நாமிருந்தே - என்றும்
தோன்று கலைகளைக் காப்பவர்நாம் - கோயில்
தொன்மை மரபினை மீட்பவர்நாம்! (91)

இரட்டைக் காப்பிய உரிமை

மானச் சிலப்பதி காரமுடன் - இன
மாமணி மேகலை காப்பியமும் - தரல்
ஆன பழந்தமிழ் நன்மரபைப் - போற்றும்
அன்பில் தழைப்பது நம்மனமே! (92)

பண்பாட்டுக் காவல்

ஆடை அணிமணி வாழ்வுமுறை - பக்தி
அன்பு மணம்எனும் அத்தனையும் - தமிழ்ப்
பீடு வழியினைப் போற்றுகிறோம் - எனல்
பேச்சென லோ?இன்றும் காட்சிகளே! (93)

வேற்றுக் கலை,வழி நாகரிகம் - கொடும்
வெள்ளமாய்ச் சூழுமிக் காலத்திலும் - உயிர்
போற்று தவமெனத் தொன்மரபைக் - காக்கும்
பூவையர் செந்தமிழ்ப் பூக்களன்றோ! (94)

செய்வன திருந்தச்செய்

செய்வன யாவும் திருத்தமுறச் - செய்யும்
செம்மை மனத்திற் குரியவர்நாம் - சோம்பித்
தொய்வதும், ஆணவம் தூக்கிவிட - வானைத்
தொட்டிடத் துள்ளலும் நாமறியோம்! (95)

செய்யும் தொழிலொன்றே தெய்வமன்றோ! - தொண்டு
செய்து மகிழ்வதே இன்பமன்றோ! - காலம்
பெய்யும் மழையாய் நலமளிப்போம் - கற்றும்
பேதைபோல் காட்டிச் செயல்விளைப்போம். (96)

உறவுத்துணை

செல்வர்க் கழகு செழுங்கிளையைத் - தாங்கிச்
சீருறச் செய்வது நம்அறமே - நாவின்
சொல்லற நாணயம் நான்மறையே - சுடும்
சோதனை வெல்வது தான்,திறமே! (97)

சுட்டி உறவை உயர்த்துவமே - அன்றிச்
சோர்வுறச் செய்வதை நாமறியோம் - தலை
கொட்டி அழிப்பதும் வீழ்த்துவதும் - அறக்
குற்றம் எனலே,நம் வாழ்வுமுறை! (98)

விருந்து வேளாண்மை

வாழை இலை,தலை வாழையெனப் - பெயர்
வாய்த்ததும் எப்படி? நம்அகத்தில் - என்றும்
வாழும் விருந்தோம்பும் வண்மையினால் - என
வையம் அறிந்ததை யாரறியார்? (99)

கோட்டை நகரத்தார் செய்விருந்தோ - எனக்
    கோடை வெயிலும் குளிருமெனில் - வழிப்
பாட்டை எனவே இலைவிரித்து - வைக்கும்
    பண்ணியம் பற்றி,வே றென்னஉரை? (100)

ஓங்குவான் வில்லென வாழைஇலை - எங்கும்
    ஒட்டிய முத்தென நீர்த்துளிகள் - அவை
தாங்கி அடக்கும் எழுநிறங்கள் - உள்ளே
    தாளம் இடுமே உணர்வலைகள்! (101)

வெற்றாய் இலைமட்டு மோ,பெரிது? - அதில்
    வேண்டும் உணவு வகைபடைத்தால் - இலை
பற்றாமல் போகச் சிறிதாகுமே - கண்ட
    பார்வையால் மட்டும் பசிபோகுமே! (102)

வைத்த வகையால் இலைசிறிதோ? - இல்லை,
    வாழை இலையால் வகைகுறைவோ? - என
மெத்தஓர் ஆய்வை நடத்திடலாம் - எனும்
    மேன்மை விருந்து,நம் மோர்,விருந்தே! (103)

அன்பு மணக்கும் வரவேற்புரை - உண்ணும்
    ஆவலைத் தூண்டும் படைக்குமுறை - புதுத்
தென்பு முளைக்கும் உணவுவகை - புகழ்
    தேடி விளைக்கும் விருந்துநிலை. (104)

ஒன்றை எடுக்க,மற் றொன்றுவரும் - மனம்
    உண்பதோ... பார்ப்பதோ... என்றதிரும் - வகை
என்றுதான் எண்ண,ஓர் நாள்பிடிக்கும் - கண்கள்
    ஏங்கியே உண்ணவு மே,துடிக்கும்! (105)

கண்டு சுவைப்பதும் பட்டியலைக் - கேட்டுக்
    காது சுவைப்பதும், தொட்டுணர்ந்தே - உடல்
கொண்டு சிலிர்க்க,வாய் உண்டபின்னும் - மூக்குக்
    கொள்ள மணப்பதும் நம்விருந்தே! (106)

'ஒண்டொடி கண்ணேதான் ஐம்புலனும் - உள'
ஓதினான் வள்ளுவன் என்றறிவோம் - விருந்
துண்டவர் சொல்லட்டும், நம்விருந்தும் - பெண்ணை
ஒத்திடும் என்றால் புதுமையன்றோ! (107)

பத்து விரல்களும் தொட்டிடவே - ஓடும்
பண்ணயக் கூட்டம் இலைநிறைக்கும் - சிறு
வித்தென வே,சோற்றை வைத்திடலாம் - இடம்
வெற்றாய் இருப்பதும் அவ்வளவே! (108)

கண்ணைப் பறித்திடும் ஓரினிப்பு - ஓடிக்
கைவிரல் தொட்டிடும் ஈரினிப்பு - சுற்றி
வண்ண வகைகளாய்க் காய்கறிகள் - அன்பாய்
வட்டித்தல் காண்பது தான்,எழில்கள். (109)

வாழை இலை,எதிர் ஓரத்திலே - ஒன்று
வைத்திருந் தால்,அதை எட்டுதற்குத் - தலை
கூழை வணக்கம் இடுவாரெனச் - சிலர்
தொங்கிக் குனிதல்,நற் காட்சியன்றோ! (110)

மெய்யப்பர் புன்சிரிப்பு

<u>மெய்யப்பர் தண்முகப் புன்சிரிப்பாய்</u> - மழை
மேகத் திடைதோன்றும் மின்னலெனப் - பசுந்
நெய்தான் இலையிடைக் கோடுகளாய் - ஓடும்
நேர்த்தி விருந்தினில் பீடுகளாம். (111)

செட்டிநாட் டார்,தம் விருந்தினிலே - கவி
சிந்தும் நயமென உண்ணுதொறும் - புது
மட்டில் சுவை'பல வாய்(க்)'கிடைக்கும் - இதை
மானுட நெஞ்சக மே, சுவைக்கும்! (112)

பொங்கும் உயர்செல்வம் அத்தனையும் - புகழ்
பூக்கும் திருப்பணி ஆற்றுதற்கே - என
எங்கும் திசைகள் கடந்துசெல்வோம் - இனம்
ஏற்ற மரபாய்த் தொடர்ந்து செய்வோம்! (113)

அங்கிங்கெனாத ஆலயப்பணி

ஆலயம் கட்டும் அரும்பணியை - என்றும்
அங்கிங் கெனாமல் கடல்கடந்தும் - மறைச்
சீல முறச்செய்தோம், வாழ்தமிழர் - தெய்வச்
சிந்தனை ஓங்கும் வழிநடந்தோம். (114)

வாழும் தமிழும் தமிழினமும் - இங்கே
வாழும் நிலமுள தென்பராகில் - அங்கே
சூழும் உறவை வளர்த்திடவே - நல்லோர்
சொல்வழிக் கோயில் அமைத்தவர்நாம். (115)

சிங்கை மலேயா,பர் மாவினிலும் - ஈழம்
சேர்ந்த இலங்கையாம் தீவினிலும் - தூய
கங்கை,நீ ராகவே ஆன்மிகமே - பாயக்
கண்டார் திருக்கோயில் நம்மவமே! (116)

பக்தி நெறி, இந்தோ நேசியாவில் - தமிழ்ப்
பண்பாடு மே,கீழை ஆசியாவில் - கோயில்
தக்க வகைகட்டித் தான்,வளர்த்தார் - உயர்-
தான,தர் மங்களை வாழவைத்தார். (117)

பக்தியும் பயனும்

இன்றும் தமிழிசை ஏற்றிடுவோம் - தமிழ்
ஏந்தும் திருமுறை போற்றிடுவோம் - இசை
மன்றமும் கோயிலும் செந்தமிழின் - தூய்மை
மல்கி மணத்திடச் செய்திடுவோம்! (118)

கோயில் பெயரால் மொழிவளர்த்தோம் - கலைக்
கூடம் பிறக்க வழியமைத்தோம் - மன
நோயை அகற்ற இசையளித்தோம் - இறை
நோன்பென வே,பசி தான்தொலைத்தோம்! (119)

சென்றநாட் டின்,புது நாகரிகம் - உயிர்ச்
செந்தமிழ்ப் பண்பாட்டைச் சீரழிக்கும் - கொடும்
புன்மை நிலை,வாராக் காப்பெனவே - கோயில்
பொன்னென எங்கும் பொலியவைத்தோம்! (120)

இறையும் தமிழும்

தெய்வப் பணிக்குள் தமிழைவைத்தார் - வளர்
தீந்தமிழ்த் தொண்டில் இறைமைவைத்தார் - வானப்
பெய்மழை யே,மேகம்; மேகமதே - மழை;
பேதைமை யாலே பிரித்தோமென்றார். (121)

கண்கள் இரண்டுதாம்; பார்வைஒன்றே - எனக்
கன்னித் தமிழும் கடவுளுமே - ஒன்றாய்
எண்ணிப் பணிசெய் இனத்தவர்நாம் - இதில்
ஏற்ற இறக்கம் மறுப்பவர்நாம். (122)

தாலாட்டுத் தமிழ்

துள்ளும் புலியையும் தூங்கவைக்கும் - ஆச்சி
தொட்டிலைத் தொட்டுத்,தா லாட்டுகையில் - அவள்
உள்ளம் கனிந்து,செந் நாவசைக்கும் - ஒலி,
ஓடி வருங்காற்றை நிற்கவைக்கும்! (123)

அன்னையின் தாலாட்டைக் கேட்பதெனில் - தூக்கம்
ஆகா தெனப்,பூ விழிமழலை - முகம்
புன்னகை பூக்க இமைக்கதவை - மூடிப்
பொற்செவி மட்டும் திறந்துவிடும். (124)

<u>மெய்யப்ப னார்,எனும் மேன்மையினார்</u> - பாக்கள்
<u>மென்று சுவைக்கும் மனத்தவராம்</u> - அவர்
துய்ய,பா ராட்டெனத் தென்றலதும் - வீசித்
தொட்டில், தா லாட்டையே கேட்கவரும். (125)

தாலாட்டில் பண்பைக் கலந்திசைப்பார் - பாடித்
தாய்மை நலத்திற் குயிரளிப்பார் - இசை
நூலாக வாழ்வைப் புரியவைப்பார் - உயர்
நோக்கங்கள் யாவும் அறியவைப்பார். (126)

பேரழகு

தேனம்மை மெய்யம்மை நல்லழகி - எனத்
தித்திக்க வே,தமிழ்ப் பேரிடுவோம் - ஆணைத்
தேனப்பன் மெய்யப்பன் என்றழைப்போம் - என்றும்
தீந்தமிழ் வாழ வழிவகுப்போம். (127)

நல்லம்மை என்று,நா மே,அழைப்போம் - உமை
நாயகி யாளென வே,விளிப்போம் - இவை
செல்வச் செழிப்பென நாம்படைத்த - புதுச்
செந்தமிழ்ப் பேரெனக் கூவிடுவோம்! (128)

வெல்லும் தமிழினி தோற்பதிலை - எனும்
வீறுடன் நாம்புதி தாயளித்த - சுவை
வெல்லப் பெயரே அழகப்பனார் - இந்த
வெற்றிப் பெருமிதம் கொண்டவர்நாம். (129)

செந்தமி ழோடு சிவநெறியும் - எங்கள்
சிந்தை நிலைத்த உணர்வுகளாய்ப் - பெயர்
தந்தோம் உமையாள்,மீ னாட்சியெனப் - பிறர்
தாமறி யாத,நம் பேறுகளாம்! (130)

நாட்டுப்பற்றில் நாம்

நாட்டுப்பற் றில், நமக் கே,நிகர்நாம் - தூய
நற்றமிழ்ப் பற்றில் அதற்கிணையாம் - சிறு,
வீட்டுப்பற் றால்,விளக் கேற்றிடினும் - இருள்
வீதிவிட் டோடிடச் செய்பவர்நாம். (131)

செல்வம் மிகுந்தோர் நிதிகொடுத்தார் - களச்
சிங்கங்க ளாக உழைப்பளித்தார் - சிறை
செல்ல முடிந்தவர் வாழ்வளித்தார் - ஈகம்
செய்யும் வகையில் உயிரளித்தார். (132)

காந்தியச் சிந்தனை

காந்தியச் சிந்தனை வாழ்க்கைநெறி - நாட்டைக்
காக்கும் திருத்தொண்டே போற்றுகுறி - புகழ்
ஏந்தும் விடுதலைச் செம்பயிர்க்கு - நீராய்
இன்னுயிர் ஈந்தோர் கணக்கிலரே! (133)

கைந்நூலை நூற்றுக் களித்தவர்நாம் - அய்யன்
காந்தி நினைவில் சிலிர்த்தவர்நாம் - நாட்டின்
மைந்த ரென,அடி மைக்கொடுமை - தீர்க்க
மண்ணில் புரட்சி புரிந்தவர்நாம். (134)

தேய அடிமை,இ ராட்டினத்தைச் - சுற்றில்
தீரும் எனும்சொல்லே போர்க்கருவி - என
நேய முடனதைச் செய்தவர்நாம் - தாமே
நெய்த கதரை உடுத்தவர்நாம். (135)

கம்பனடிப்பொடி

கம்ப னடிப்பொடி சா.கணேசர் - காந்தி
காலடி தொட்டுத் தொடர்ந்தவரே - என்றும்
தும்பை மலர்போல் கதரணிந்தார் - சிறு
துண்டன்றி மேலுடையே, மறந்தார். (136)

சிவமணி இராய.சொ.

நற்சிவ மாமணி சொக்கலிங்கர் - எனும்
நம்மவர் ராய.சொ. வீட்டினிலே - காந்தி
பொற்பதம் பட்ட சரித்திரத்தை - இன்றும்
பூரித்துச் சொல்வதைக் கேட்டிடலாம். (137)

செட்டிநாட் டின்,முதல் தேசபக்தர் - எனும்
சீர்மிகு ராய.சொ. காந்தியினைப் - போற்றிக்
கட்டித் தமிழினில் பிள்ளைத்தமிழ் - தந்த
காலத்தை என்றும் நினைத்தெழலாம்! (138)

பாடல் பெற்ற மாமரபு - (உ)

(வேறு)

சங்கக்,கா லத்தினில் செட்டிநாட் டின்,காவல்
சார்ந்த பிரிவுகள் நாமறிவோம் - புகழ்
பொங்கு,கா னாடு, மிழலைக்கூற் றத்தோடு
பூங்குன்ற நாடும் என்உணர்வோம். (139)

ஒல்லையூர் நாடும் இவற்றுள்,ஒன் றாமெனும்
    உண்மை தனை,வர லாறறியும் - கொடை
எல்லை அறியாத பாரி உலாவிய
    எங்கள் பறம்புநா டென்றறியும். (140)

தொடரும் சங்கமரபு

சங்கக்,கா லத்தினர் கொண்ட மரபுகள்
    சற்றும் குறையாமல் இன்றிருக்கும் - வளர்
எங்கள் குலமெனப் பொங்கி மகிழ்ந்திடில்
    எங்கும் மறுப்பவர் இல்லையென்போம்! (141)

இல்லறம் ஏற்கும் புதுமண மக்களை
    என்றும் தமிழென வாழியரோ - என
நெல்லொடு பூவையும் தூவியே வாழ்த்திடும்
    நெஞ்சகம் சங்கக்,கொ டைதானன்றோ! (142)

நற்சங்கக் கால மகளிர் அணிமணி
    நம்குல மூத்தோர் அணிகலனாய் - இன்றும்
பொற்புறும் என்னும் தொடர்பை அறிஞர்தாம்
    போற்றுவர் என்பதே இன்பமன்றோ! (143)

'உள்வீடு'

பத்துப்பாட் டில்,காண லாகும்'உள் வீட்'டினைப்
    பார்க்கலாம் இன்றும் எனஅழைத்தே - முன்னோர்
சொத்தெனும் வீட்டினில் காட்டிட லாமெனில்
    சொல்லவும் ஒண்ணுமோ நம்பழைமை! (144)

வாழ்வியல் ஓவிய மாம்,அக நானூற்றில்
 வந்துள மங்கலக் காப்பினையே - கட்டல்
தாழ்விலை என்றினி தாகவே இன்றும்நாம்
 தண்டமிழ்ப் பண்பெனப் போற்றுகிறோம். (145)

மங்கலக் காப்பு

மங்கலக் காப்பெனக் கட்டுகி றோமின்றும்
 மன்னும் அகநூலில் காணுமிது - எனில்
சங்கத் தொடர்பினைக் கொள்ளும் மரபெனச்
 சங்கே முழங்கெனக் கூறுவமே! (146)

பூமண மிட்டும் அரிமண மிட்டுமே
 புத்தம் புதுமண மக்களினை - வாழ்த்தி
நாமணம் கூட்டும் வழக்கம் நகரத்தார்
 நற்சங்கக் காலத் தொடர்புரைக்கும். (147)

புலமைச் சோலை

செட்டிநா டென்றால், புலமைவிண் மீன்கள்தாம்
 சேர்ந்திருக் கும்,வானம் என்றிடலாம் - என்றும்
பட்டுப்போ காத உயர்வு பழந்தமிழ்ப்
 பாவலர் தொட்டு வளருவதாம். (148)

பண்டை இலக்கண மாம்,வீர சோழியம்
 பாடிப் படைத்த திறமையினைச் - சேவல்
கொண்டை எனவே,கொண் டார்,புத்த மித்திரன்
 *கூற்ற மிழலை அளித்தவரே. (149)

*மிழலைக் கூற்றம்

மாமணி வாசகர் தாம்,இறைச் சீரடி
மாமல ரான பெருந்துறையூர் - இன்று
கோ,மணி மார்பெனும் ஆவுடை யார்,திருக்
கோயில் எனவாழும் கூறுவமே. (150)

இற்றைய ஒல்லையூர் மங்கல மே,புகழ்
ஏற்றமிகு, ஒல்லை நாடெனவே - சங்க
அற்றைய காலம் விளங்கிய தே,தமிழ்
ஆட்சியும் அங்கே துலங்கியதே. (151)

ஒல்லையூர் தந்தவ ராம்,பூதப் பாண்டியன்
உற்ற புகழார் பெருஞ்சாத்தனும் - தந்த
நல்லறப் பாடல் அகம்,புற நானூற்றில்
நண்ணும் சிறப்பு நமக்குரிமை. (152)

கணியன் பூங்குன்றனார்

(வேறு)

யாதுமூர் எல்லோரும் நம்மவ, ரேஎன்ற
ஞானப் புதுமைப்பூங் குன்றனராம் - உயர்
முதுரை யாளரும் நம்மவ ரே,புகழ்
முத்தபூங் குன்றமும் நம்முடைத்தே. (153)

ஒக்கூர்,மா சாத்தியார் சாத்தனார் நம்மின
ஓங்கு புகழ்மர வேர்களாவார் - வாழத்
தக்கவை கூறும்நற் பாடல்கள் யாவுமே
தண்டமிழ் நூற்கடல் முத்துகளே. (154)

கோணாட்டு மாடலன், மாற்றூர் கிழார்மகன்
கொற்றங்கொற் றன்,கபி லப்புலவர் - எனப்
பூணாரப் பாக்கள் பொழிதகை யோரெலாம்
பூத்த நிலம்,செட்டி நாடுதானே! (155)

வள்ளல் பாரி

பாரியும் நம்மோர் தவப்பய, னேஅவன்
பாராண்டு வாழ்ந்ததும் நம்மலையே - பலா
வேரிற் பழுக்கும் பறம்பு,நா டென்பதும்
வேறன்று நந்தம் பிரான்மலையே! (156)

கல்வி கலைஎன்றும் ஆன்மிகம் என்றுமே
கைப்பொருள் அள்ளிக் கொடுத்துவரும் - கொடை
வல்ல மனங்களில் பாரியே வாழ்கிற
வண்ணம் அறிந்து தெளிந்திடுவோம். (157)

பட்டினத் தார்,பரி மேலழ கர்,தந்த
பாட்டும் உரையும் பிறந்தநிலம் - அற்றைச்
செட்டிநா டென்னும் சிறப்பை மறந்தோமேல்
சீற்ற மடைந்தே நிலாவெடிக்கும். (158)

சிலம்பு

மூவேந்தர் என்பது மோதி அழியவோ
மூடம் என,ஒன்றித் தானெழவே - முதல்,
தாவும் உணர்வால் இளங்கோ வடித்திட்ட
தண்டமிழ்க் காப்பியம் நம்முரிமை. (159)

காப்பிய நாயகி நம்மவ ளே,களம்
கண்ட புகார்நகர் நம்நகரே - ஞாலத்
தோப்பில் கனிந்த முதற்கனிக் காப்பியம்
தூய சிலம்பு நமக்கணியே! (160)

சாத்தனார்

மாதவி யாள்,மகள் மேகலை யாள்,சிறை
    மாற்றி அறச்சாலை கண்டவளாம் - புகழ்ப்
போதவிழ் நல்வர லாற்றினைத் தந்தவர்
    போற்றுவோம் நம்மினச் சாத்தனாரே. (161)

பெற்ற,மா காப்பியப் பேறுகள் நம்மினம்
    பெற்றமை கூறும் திருவலவோ - இதைக்
கற்றவர் போற்றுவர் நாமறி யோம்,எனில்
    காற்றும்,சூ டேறிக் கனன்றிடுமே! (162)

பாரதி மரபினர்ப் பாடலும் பெற்றோம் - (ஊ)

பாக்களைத் தந்தவர் நம்மவ,ரே புகழ்ப்
    பாக்களைப் பெற்றவர் நம்மவரே - சங்கப்
பூக்களாம் பாக்கள் பலவளித் தோம்,எனும்
    போற்றற் குரியவர் நம்மவரே. (163)

மூவர பாடிய கோயிலென....

மூவர் வணங்கிய கோயில் எனிலன்றோ
    முப்பறி யாப்,புகழ் பெற்றதென்பர் - தெய்வம்
தேவாரப் பாடலைப் பெற்ற புகழெனத்
    தேனாரப் பாடல்கள் பெற்றனமே! (164)

பாடல்கள் தந்தமரபடி யோ,சங்கப்
    பாக்களைக் காட்டியே கூறடியோ - போற்றும்
பாடல்கள் பெற்ற இனமடி யோ,பழி
    பார்த்துப் பணியும் மனமடியோ! (165)

கும்பிட்டுப் போற்றும் குலமடி நாம்,கவிக்
கோக்கள் புகழும் உளத்தினர்நாம் - பாட்டுத்
தும்பிகள் வாழ்த்தி இசைத்தவை யாவும்,நம்
தொண்டுகள் பெற்ற பெருமையர் நாம்! (166)

தேனாரப்பாக்கள்

தொண்டு செயலே வழியெனும் வாழ்வினர்
தூய மதநெறி போற்றுநராம் - எனக்
கண்டு மகிழ்ந்தே க்விதை தொடுத்தனன்
காலனை யே,மிதித் தான், கவியே! (167)

செட்டியார் மக்கள் குலவிளக் கே,பரா
சக்தி புகழ், வை.சு. சண்முகமே - எனப்
பொட்டுவைத் தார்,கவி போற்றவைத் தார்,எரி
போன்ற கவிதரும் பாரதியே. (168)

கானாடு காத்தான் கருணைச்செல் வா,உனைக்
கண்டேன் வறுமை களைந்திடுவாய் - எனத்
தேனாறு தந்தனன் மாகவி பாரதி
தீந்தமிழ்ச் சோலை செழித்திடவே! (169)

உத்தம ராம்,தன வாணிக ரென்றுமே
ஒப்பிலாப் பட்டம் அளித்தனனே - அந்தப்
புத்தமிழ் தக்,கவி போற்றும் இனமெனப்
புல்லும் உணர்ந்திடக் கூறுவமே. (170)

கவிமணி

மண்ணை மலையாய் உயர்த்தும் கழகத்தின்
மாண்பே உலகை அழைக்குமெனத் - தந்த
அண்ணா, மலையாம், நம் மன்னர் பெருமையை
அன்றே கவிமணி போற்றினரே! (171)

துள்ளும் மகிழ்வுடன் தில்லை நடராசன்,
தோன்றும்,பல் மாகலை மன்றமதைக் - கண்டே
அள்ளும் விழிகள் மலர நடமிடும்
அற்புதம் காண்கிறோம் என்றனரே. (172)

பாவேந்தர்

அண்ணா மலைப்பேர் கலைக்கழ கந்தனை
அப்பா நினைவாக முத்தய்யாவும் - இரு
கண்ணாய் வளர்ப்பது, தூண்டா விளக்கெனக்
கண்டு கனிந்தார்,பா வேந்தரன்றோ! (173)

அணணாமலை அரசர்

அண்ணா மலையாம் அரசரைப் பாவேந்தர்
ஆரா அமுதெனப் போற்றினரே - புகழ்
வண்ணக் கலைத்தோட்டக் கார ரென,ஏத்தி
வாழ்த்திக் கவிதை வழங்கினரே. (174)

ஓம்பும் உடைமை, உழைப்பினை ஈந்துமே
ஒப்பிலை என்றுல கேத்திடவே - பசுக்
காம்பெனக் கல்வி சுரக்கும் கழகத்தைக்
கண்டஅண் ணாமலை என்றுரைத்தார். (175)

கோமான் எனவே கொடையளி செய்கின்ற
கொற்றவர் யாரெனக் கேட்டிடிலோ - மனம்
ஆமாம்... நகரத்தார் செட்டிநாட் டாரெனும்,
அண்ணா மலைஎனும் என்றுரைத்தார். (176)

அண்ணா மலைமன்னர் ஆவல் நிறைவேற
ஆட்சி செயுமிள மன்னவராம் - இரு
கண்ணாய் நகரத்தார் காணும்முத் தய்யாவைக்
காவலர் என்றார்,பா வேந்தருமே! (177)

அச்சப் படுத்தி அலைத்திட ஒண்ணாத
ஆற்றலைப் போற்றப்,பா வேந்தரவர் - கரும்
பச்சைக் குளவி மறச்சாதி என்றுதான்
பாடி மகிழ்ந்ததைப் போற்றுவமே! (178)

பாடுவார் முத்தப்பர்

வெற்றித் திருமக ளே,நக ரத்தினர்
வீட்டை விடுத்தக லாதிருப்பாய் - எனப்
பொற்புறப் 'பாடுவார் முத்தப்ப செட்டியார்'
போற்றி மகிழ்ந்ததைப் போற்றுவமே! (179)

காட்டினை மாற்றியே காவல் சிறந்திடக்
கண்ணுள் பொலிந்து நிலைத்திடவே - உயர்
வீட்டினைக் கண்டவர் வேள்வணி கத்தவர்
வெல்கவே என்றவர் வாழ்த்தினரே. (180)

கிருபானந்தவாரியார்

ஊழி பலவென்றே ஓங்கி நகரத்தார்
உற்ற துணைசெயும் வள்ளல்களாய் - என்றும்
வாழி எனக்,கிரு பானந்த வாரியார்
வாழ்த்திய வாய்மை வளரட்டுமே! (181)

இத்தலத் தில்,கோயில் எண்ணறக் கண்டவர்
   என்று மலர்ந்த தமிழ்ப்பெரியார் - வாழி
எத்தல மும்,போற்ற வாழ்க நகரத்தார்
   என்ற புகழிசை ஓங்கட்டுமே! (182)

கவியரசு கண்ணதாசன்

வண்ணக் கலைகள் வளர்த்தோம் திருக்கோயில்
   வான்முடி சூட வணங்கிநின்றோம் - தூசாய்
எண்ணியே 'ஒன்பான் மணிகளைக் கொள்' என்னும்
   ஈகை வளர்த்தோமென் றார்,கவிஞர். (183)

மீனாட்சி யோடும் விசாலாட்சி அம்மையின்
   மேனி பொலியும் அணிகளெலாம் - உயிர்
ஊனாட்சி செய்திடும் பக்தி உரைப்பதை
   ஓம்புக என்றார் கவியரசே! (184)

நாமாகக் கொண்ட அடக்க நலத்தினை
   நம்கவி வேந்தராம் கண்ணதாசர் - என்றும்
தாமாகத் தம்மைத் தலைதூக்கிக் கொள்ளாத
   தன்மையோர் என்றே உயர்த்தினரே! (185)

மலைமுத்து மன்னர்முத்தையா

கல்லா இனத்தினைக் கற்கவைத் தார், பணி
   காட்டும் புகழையோ நிற்கவைத்தார் - குறள்
நல்லறம் வாழ்வில் படியவைத்,தார் எனும்
   நற்றமிழ் வாழ்த்தை,முத் தய்யாபெற்றார். (186)

வ. சுப. மாணிக்கனார்

எங்கும் உவமை இலாமல் கழகத்தை
ஏற்றி,முத் தய்யா உயரவைத்தார் - எனப்
பொங்கியே வ.சுப. மாணிக்க னார்,வாழ்த்தும்
பொன்னுரை நம்நக ரத்தவர்க்கே. (187)

வள்ளல் அழகப்பா

பாரிக் கிணையாக ஓரிக் கிணையாகப்
பற்றிச் சுமக்கும்,கை யே,சிவக்க - ஈந்த
மாரிக் கிணையாம் அழகப்பர் என்றாரே
மாமணி வ.சுப. மாணிக்கனார். (188)

பண்டிதமணி கதிரேசனார்

பண்டித மாமணி நற்கதி ரேசனார்
பைந்தமிழ்ச் சீரே உருவத்தினார் - என
எண்டிசை ஏத்த புகழ்விரித் தார்,புகழ்
ஏந்தலாம் வ.சுப. மாணிக்கனார். (189)

இராம-பெரியகருப்பன்

செந்தமிழ்க் கல்லூரி செவ்வனம் கண்டதால்
சிந்தை மகிழ்ந்துநம் மாணிக்கனார் - உயர்
விந்தைப்பே ராற்றல் பெரிய கருப்பர்தம்
வெற்றிச் செயலெனப் போற்றினரே. (190)

ஐம்புலந் தம்மை அடக்கிய சான்றோராம்
அன்பர் எளியர் இனியவராம் - எனக்
கொம்புத்தேன் செந்தமிழ் மாணிக்க னார்,தமை
கும்பிட்டா ரன்றோ முடியரசன். (191)

கவியரசு முடியரசு

கன்னித் தமிழ்வழி யே,கலை யாவுமே
கற்பிக்க வேண்டும் எனும்மறவர் - இனப்
பொன்மணி வ.சுப. மாணிக்க னார்தமை
போற்றி முடியர சன்,புகழ்ந்தார். (192)

பெரும்புலவர் கி.வா. ஜகந்நாதன்

வீசு புகழோடே அன்னதா னம்,திரு
வண்ணா மலையினில் செய்துவரும் - பசி
மாசகற் றும்,மெ.க. சந்திரர் நற்கொடை
மன்னுமென் றார்,'கி.வா.ஜ.' மகிழ்ந்தே. (193)

ச. மெய்யப்ப மேகம்

வாணிகம் தந்த வரும்படி முப்படி
வானம் எனவே விரிந்தபடி - தமிழ்
பேணப் பெரும்படி என்றான் முறைப்படி
பெம்மான், மெய் யப்பர் உளப்படியே! (194)

கல்விக் கழகங்கள் எங்கெங்கோ அங்கெலாம்
கன்னித் தமிழ்க்கறக் கட்டளைகள் - வைத்த
நல்லார்,மெய் யப்பர் புகழிசைக் கும்,கும்மி
நல்கினான் தென்னகன் நாடறியும். (195)

மெய்யப்பர் கும்மி

அன்னை மொழிக்கு,மெய் யப்பர் திருத்தொண்டை
ஆற்றுவார் என்று தமிழுலகின் - சார்பு
நன்றியாய்த் தென்னகன் மெய்யப்பர் கும்மியை
நாடி அளித்தனன் நாமறிவோம்! (196)

நகரத்தார் இசைக்கும்மி

உள்ள தகுதியை உள்ளும் தகுதிதான்
உள்ள திறத்தில் உயர்ந்தவராய் - நெஞ்சம்
அள்ள நகரத்தார் கும்மியைத் தென்னகன்
ஆக்கவே செப்தார்,மெய் யப்பனாரே! (197)

ஒல்லும் வழி,நக ரத்தார் புகழினை
ஓம்பி நிலைப்புறச் செய்பணியால் - அவர்
செல்வங்கள் ஓங்குக; சீர்பல ஓங்குக;
செம்மை அறங்களும் ஓங்குகவே! (198)

பேறெனா நூல்பல பெற்றோம் - (எ)

(வேறு)

விச்வநா தக்கவி தாமளித்தார் - எல்லாம்
வெற்றியே என்னும் நகரத்தவர் - கொடை
அச்சமி லா,வர லாற்றினை யே,(1)கவி
ஆரம் தொடுத்தார்,நற் பேற்றினையே! (199)

வேல்சாமி நாதக் கவிராசர் - பகை
வெட்க நலம்செய் நகரத்தவர் - திரு
மால்மரு கன்,புகழ் பாடி மலைவல
மாக வருவோரைப் (2)பாடினரே! (200)

தென்புதுச் சேரிச் சடகோபர் - எல்லா
தேயமும் வாழும் நகரத்தவர் - திரு
மன்னும் புகழை மணிகளாய்க் (3) கோத்தனர்
மாத்தமிழ் பெற்ற,நற் பேறெனவே! (201)

---

(1) நகரத்தார் திருமுக விலாசம் (2) நகரத்தார் முதுநெறி விளக்கம் (3) தனவணிக நகரத்தார் நவரத்தினம்

முத்தமி ழோடும் இறைநெறியும் - கொடை
மூச்சென வும்,கொள் நகரத்தவர் - புகழ்
எத்திசை யும்,நில வே,எனப் 'பாடுவார்
ஏந்தல்முத் தப்பர்'(4) இசைத்தனரே! (202)

செந்தமி ழில்சிவ சண்முகனார் - வளர்
செல்வம் பணிக்கெனும் செட்டிமார்தம் - நாளும்
முந்து புகழினைத் தந்தார் (5)கவிதையில்
மூவா இனத்தின் பெருமையன்றோ! (203)

'மின்சாரத் தந்தி விடுதூது' - என
மேலோர் சிவ.சண் முகனார்தாம் - மனப்
பொன்னார் நகரத்தார் பூத்த வரலாற்றைப்,
பொற்பினைப் பாடிப் பொலிந்தனரே! (204)

நாகப்பன் 'பூங்குன்றப் பாமாலை' - எனும்
நந்தமிழ் கொஞ்சும் திருநூலில் - உளம்
வேகப் படாது செயல்புரிச் செட்டிமார்
வெல்லும் திறத்தை விளக்கினரே! (205)

குன்றம் பழம்நீ குடியிருப்பார் - பெயர்
கொண்ட புலமைசேர் அப்பருமே - சந்தம்
நின்று செவியில் ஒலிக்கவோர் (6)சிந்தினை
நாடி அளித்தார் அறிகுவமே! (206)

ஞானத் திரு,ஞான சம்பந்தராம் - கவி
நம்நக ரத்தவர் தம்புகழை - உயிர்
மானத்தர் என்னும் மரபினைப் போற்றியே
மாண்புற வே,தமிழ் நூலளித்தார். (207)

(4) செட்டிமார் வரலாறு (5) தனவைசியர் பஞ்சரத்தினம்
(6) தனவைசியர் நொண்டிச்சிந்து

(வேறு)

'ஏழு நகரத்தார் தம்பள்ளு நாடகம்'
என்னும் கவிச்சரம் தந்தனரே - திரு
வாழும் நகரத்தார் வற்றாத கங்கையாய்
வாழி தமிழென வாழ்த்தினரே! (208)

'வீட்டினிற் செட்டாக வாழ்ந்திடு வார்,ஏதும்
வீணின்றி மிக்கக் கணக்கிடுவார்' - எனக்
கூட்டும் இசையில் 'தனவணி கக்கும்மி'
கோபுர மாக,நாம் கொண்டனமே! (209)

பாரதி யன்பர்,சுத் தானந்த பாரதி
பாடிய கும்மி ஒலிக்கையிலே - இனச்
சீரெழு மா,இசைத் தேனெழு மா,எனச்
செந்தமிழ் எண்ணிச் சிலிர்த்தெழுமே! (210)

இரட்டைக் கிளவிபோல் இருபணிகள் - (ஏ)

(வேறு)

பக்திப் பணியெனக் கல்விதந்தோம் - கோயில்,
பள்ளி யெனக்கண்டு வாழ்வுதந்தோம் - கல்வி
தக்க பணியெனப் பக்திதந்தோம் - பள்ளி
தானே திருக்கோயில் என்றுவந்தோம்! (211)

சேர்ந்தே இசைக்கும் *இரட்டையெனப் - பக்திச்
செந்தமிழ்த் தொண்டும் பிரிவதில்லை - பணி
நேர்ந்தால் இரண்டும் நிறைந்திருக்கும் - எனும்
நெஞ்சினர் நாமென் றுலகறியும். (212)

* இரட்டை - இரட்டைக்கிளவி

தேவார, ஆகமப் பள்ளிவைத்தோம் - தமிழ்த்
தேன்திரு வாசகம் சொல்லவைத்தோம் - சிறார்
நாவாரப் பாடல் இசைக்கவைத்தோம் - பசி,
'நானில்லை' என்றங்கே ஓடவைத்தோம். (213)

ஆறும் ஐம்பதும்

ஆறு தலத்தினில் ஆகமமும் - வேதம்
ஐம்பதில் கற்கவும் செய்தவர்நாம் - மக்கள்
வேறு மதமாற்றம் கொள்வதனைப் - பகை
வேற்றுமை இன்றித் தடுத்தவர்நாம். (214)

காரைக் குடிச்சொக்க லிங்கஅய்யா - அன்பால்
கண்ட'மெய் கண்டவித் யாசாலை'யில் - நாயன்
மாரை நினைக்கும் குருபூசையால் - சிவ
மாண்பை வளர்த்து மகிழ்ந்தவர்நாம். (215)

கால முறைதரும் மாற்றமதைக் - கண்டு
கல்வி வழியினை மாற்றியுமே - வளர்
ஞால நெறிதரு ஞானமெலாம் - பெற
நாடிப் பலகலைப் பள்ளிகண்டோம். (216)

அண்ணாமலை அரசர்அறம்

செட்டிநாட் டுக்,கல்விக் கூடமெலாம் - நம்மோர்
சேர்த்த திருவால் வளர்பவையே - கல்வித்
தொட்டில்,அண் ணாமலைப் பல்கலைகள் - வளர்
தூய கழகத்தைக் கண்டவர்நாம். (217)

எங்கும் தமிழிசை ஓங்கிடவே - இன
ஏந்தல்,அண் ணாமலை மன்னவர் - இசை
பொங்கும் கல்,லூரியைக் கண்டனரே - எனும்
பொன்வர லாற்றை மறப்பவர்யார்? (218)

சென்னையில் அண்ணா மலைமன்றமே - நாளும்
செய்யும் கலைப்பணி செந்தமிழின் - மானத்
தொன்மையைக் காக்கும் பணியெனவே - தமிழ்த்
தொண்டர்தாம் போற்றல் திசைஒலிக்கும்! (219)

வாழையடி வாழை

சந்தத் தமிழ்காக்கும் நெஞ்சினராய் - இசைச்
சங்கத் தலைமையை ஏற்றவராய் - உயிர்ச்
செந்தமிழ் நல்லிசை போற்றிவரும் - மு - அ
சிதம்பர னார்,புகழ் ஏத்துவமே! (220)

நாட்டை வளர்க்கும் செயல்முதல்வர் - உரம்
நாம்பெறச் செய்யும் [1]தொழிலதிபர் - சுவை
ஊட்டிடும் சர்க்கரை ஆலைபல - கண்டார்
ஓங்கு,சீர் மு.அ. சிதம்பரமே! (221)

வல்லார் படைத்து வழங்கு, புகழ் - நூல்கள்
வண்மை யறிந்து பரிசெனவே - அள்ளி
பல்லா யிரமாய் [2]அறக்கொடையின் - வழி
பற்றோ டளிப்பார் பரிவுடனே! (222)

1. ஸ்பிக் (Spic) கம்பெனி.
2. M.A.C. அறக்கொடை

அண்ணா மலைமன்னர் அன்புமகன் - ஓங்கும்
ஆல மரத்தின் பெருவிழுதாய் - மக்கள்
கண்ணாரக் கண்டு களிப்படையும் - அண்ணல்,
காலத்தை வெல்லும் புகழ்விரியும். (223)

அண்ணா மலையார் பெயரரெனும் - புகழ்
அ. சி. முத் தய்யா திருமகனார், - இசை
பண்ணா யிரமாய் வளர்வதெனத் - தந்தை
பாதையில் யாவும் விளைப்பவரே! (224)

வள்ளல், திருக்கட வூரம்மையாம் - நெஞ்சில்
வாழும் அபிராமி கோயிற்பணி, - கோடி,
'புள்ளிருக் கும்,வேளூர்' கோயிலுக்குத் - தந்து
போற்று குடமுழுக்(கு) ஆற்றினரே! (225)

ஆற்றல் இணைவேந்தர்; அண்ணாமலைக் - கல்வி
ஆலயம் காக்கும் பெயரரிவர் - பொங்கும்
ஊற்றாய்ப் பரவி திறம்விதைப்பார் - கங்கை
ஓட்டமாய் எங்கும் அறம் விளைப்பார். (226)

செம்மை யுறவே நகரத்தவர் - புகழ்
சென்றே, உலகை அளக்கவைப்பார் - எம்-ஏ
எம். இராம சாமி இணையறியா - ஏந்தல்
ஏந்தும் புகழினை யாரறியார்! (227)

ஆற்றும் உழைப்பால் பெருகிவரும் - செல்வம்
அள்ளிக் கொடுத்தால் பொலிவுபெறும் - எனும்
போற்றும் நெறிக்கே புகழளிப்பார் - என்றும்
புத்தம் புதிய விளக்களிப்பார். (228)

மன்னர்அண் ணாமலை யார்,மரபும் - குறள்
மாண்பை விரிக்கும் உரைகளென - நாளும்
பன்னூறு கோடி எனப்பெருகும் - இந்தப்
பாரில் வளர்நிலை கண்டுவப்போம்! (229)

மேலைச் சிவபுரி, செந்தமிழைக் - கற்கும்
மேன்மை பெறற்கொரு கல்லூரியைத் - தமிழ்ச்
சோலை எனப்பெற்ற காலத்தினை - இங்கே
சொல்லவும் வேண்டுமோ? காணுமன்றோ! (230)

திருவள்ளுவர் செந்தமிழ்க் கலாசாலை

பைந்தமிழ்க் கல்வி பயில்வதற்கு - வேந்தன்
பட்டியில் வள்ளுவர் தம்பெயரால் - ஒரு
செந்தமிழ்க் கல்லூரி வைத்தவர்நாம் - எனும்
சேதியை ஈங்கு மறுப்பவர்யார்? (231)

தூய தனித்தமிழ் ஆர்வலராம் - கல்வித்
தொண்டர் பெரிய கருப்பனவர் - தந்தை
நேயப் *பெயர்த்தமிழ்க் கல்லூரியைக் - கண்ட
நேற்றை வரலாற்றைப் போற்றுவமே! (232)

* இராமசாமி தமிழ்க் கல்லூரி

சொ. முருகப்பா

அன்றே அமரா வதிப்புதூரில் - முரு
கப்பா மழலையர்க் கென்றுபள்ளி - முதல்
ஒன்றை அமைத்ததைப் பாடுவமே - இனம்
ஓங்கிச் சிறந்திட நாடுவமே! (233)

வள்ளல் அழகப்பர்

காரைக் குடியில் அழகப்பராம் - பாரி
காரி எனவாழ்ந்த வள்ளலவர் - வானத்
தாரை களாய்ச்சிறார் கற்றிடவே - அன்றே
தானமைத் தார்,பள்ளி போற்றுவமே! (234)

நூற்றுக்கு மேலொரு அய்ம்பதெனப் - பள்ளி
நோன்பெனக் கல்வி வளர்ப்பதற்கே - செல்வம்
ஆற்றுநீ ராகவே பாயவைத்தோம் - கலை
ஆலயம் நாடெலாம் தோன்றவைத்தோம். (235)

செட்டிநா டெங்கும் நகரத்தாரே - கொண்ட
செல்வத்தி னால்,பள்ளி கண்டாரென - உள்ள
பட்டிச்சிற் றூர்களும் கூறிடுமே - அங்கு
பாடும் குயில்கள் இசைத்திடுமே! (236)

செட்டியார்கள் நல உரிமைச்சங்கம்

நட்புடன் நாட்டை உயர்த்திடவே - செயும்
நற்பணி கோடி வளர்த்திடவே - அன்று
செட்டியார் தங்கள் உரிமைச்சங்கம் - எனச்
சிந்தித் தமைத்ததைப் போற்றுவமே! (237)

மெ. ராம. மெ. மெய்யப்பர்.

ஆதி திராவிடர் தம்குழந்தை - கல்வி
ஆற்றல் பெறக்காந்தி மெய்யப்பனார் - (இ)ராம
நாதன் கலாசாலை தோற்றுவித்தார் - அன்றே
நாட்டில் புரட்சித்தீ ஏற்றிவைத்தார். (238)

காந்தி பாடசாலை

காந்தியார் தம்பெயர்ப் பாடசாலை - வைத்துப்
கண்கள் திறந்துமே சேரியிலே - தாழ்ந்து
சோர்ந்தவர் தாமெழச் செய்ததையும் - இனி
சொல்லிப் புகழை விளங்கவைப்போம்! (239)

தோட்டத்துப் பூவைப் பறித்தெடுக்க - வீட்டுத்
தோகைய ரே,பணம் தந்தனராம் - கல்வி
நாட்டை உயர்த்திடப் பள்ளிகளின் - பணி
நன்கு தொடரப் பணம்துணையாம்! (240)

காந்தி சமதர்மப்பாடசாலை

அமரா வதிப்புதூர் சுப்ரமண்யம் - சேரி
ஆதி திராவிடர் ஏற்றமுறக் - காந்தி
சமதர்மப் பள்ளி அமைத்தனரே - புதுச்
சாத்திரந் தன்னைப் படைத்தனரே! (241)

பாரதி வழியில்...

பெண்மையைப் போற்றியே கூத்திடுவோம் - அவர்
பேதைமை நீக்கிட ஆர்த்தெழுவோம் - நாட்டின்
கண்கள டா,அவர்; காத்திடுவோம் - என்ற
காலக் குரலை நினைத்திடுவோம்! (242)

பாரதி யின்,குரல் கேட்டவர்நாம் - பெண்மை
பாரினில் வென்றிட வேட்டவர்நாம் - ஞானம்
கூருற வே,கல்விச் சாலைகளை - நாட்டிக்
கோதையர் கற்றிட வைத்தவர்நாம். (243)

மெ. செ. மெ. மெ. மெய்யப்பர்

மீனாட்சி பெண்கள் உயர்பள்ளியை - மெ. மெ.
மெய்யப்பர் கண்டதைப் போற்றிடுவோம் - பெண்மை
தானாட்சி செய்யும் பெருமையெலாம் - நம்மோர்
தாளாண்மை கூறுமென் றார்த்திடுவோம்! (244)

அ.மெ. மெய்யப்பர்

"பெற்றிமை யோடு கலைமகளின் - பெயர்
பெற்றதோர் கல்லூரி வைத்தவராம் - அ.மெ.
நற்றிறச் செல்வராம் மெய்யப்பரின் - இனம்
நாமெனப் பாடி நிமிர்ந்திடுவோம். (245)

வள்ளல் அழகப்பர்

கல்விக் கலைகள்தாம் எத்தனையோ - அவை
கற்கும்,கல் லூரிகள் அத்தனையும் - சேர்ந்த
செல்வத்தால் ஆக்கி நிலைத்தபுகழ் - இங்கே
சேர்த்தார் அழகப்பர் வாழியரே! (246)

ஆடும் இறைவர் சிதம்பரத்தை - மன்னர்
அண்ணா மலையார் கலைக்களமாய்ச் - செய்த
நீடு புகழ்ச்செயல் ஒத்திடவே - கலை
நீரோடை கண்டார் அழகப்பரே. (247)

காரைக் குடியே கழனியெனக் - கலைக்
கல்விகள் யாவும் விளைச்சலெனக் - காணச்
சீரழ கப்பர்தாம் செய்தபணி - வானைச்
சின்னஞ் சிறிதாய்ச் சுருக்கியதே! (248)

பல்கலை கற்கும் கழகமதைச் - செல்வம்
பற்றும் பயனெனக் காரைக்குடி - காண
ஒல்லும் வழியெலாம் தொண்டுபல - செய்த
ஓங்கு புகழாரைப் போற்றுவமே! (249)

மழைச் செல்வம்

செல்வத்தை மேகமாய் மாற்றிவிட்டார் - வானில்
செல்லுங்கள் என்றாணை போட்டுவிட்டார் - அவை
கல்விப் பயிர்கண்டால், மாமழையாய் - மாறிக்
காலப் பயிரை வளர்த்தனவே! (250)

வ. சுப. மாணிக்கனார் வாழ்த்து

கல்லூரிக் கென்றுதான் காட்டினையே - மாற்றிக்
கட்டட மாக்கிய வள்ளலினை - விளக்
கில்லாத காட்டினில் கல்வியெனும் - ஒளி
ஏற்றினார் என்றனர் வ.சுப.மா. (251)

கோட்டையூர் வாழ்ந்த அரண்மனையைக் - கலைக்
கோட்டையாய் மாற்றி மகளிரெலாம் - கல்விப்
பாட்டையில் செல்ல அழகப்பனார் - தந்த
பாதையைப் போற்றினார் வ.சுப.மா. (252)

வாழ்ந்த,தம் வீட்டை வழங்கியவர் - கல்வி
வள்ளல் அழகப்பர் என்றுகவி - தந்து
வாழ்கவே கல்வி வளர்ப்பவர்தாம் - என
வ. சுப. மாணிக்கம் வாழ்த்தினரே! (253)

காலக் கடவுள் விரும்புவதும் - எதிர்
கால உயர்ச்சி வரம்பெறவும் - இந்த
ஞால,விஞ் ஞானமாம் வேள்வியினை - இங்கே
நாளும் வளர்ப்பதே என்றுணர்ந்தார். (254)

'வேதியல் ஆய்வகம்' காண்பதுதான் - உயர்
விஞ்ஞானம் போற்றும் பணியெனவே - உடன்
போதிய செல்வ மதைப்பொழிந்தார் - நலம்
பூத்திடச் செய்தார் அழகப்பரே! (255)

கருமுத்து - தியாகராசனார்

தெக்கூர் கருமுத்து, மாமதுரை - முத்தாம்
தியாகரா சர்,புகழ் நாமறிவோம் - என்றும்
புக்க மதுரை பொலிந்திடவே - தொழில்
பூத்திடச் செய்த தமிழ்மலரே! (256)

'தமிழ்நாடு' நாளிதழ்

தொக்க இருளென நாளிதழ்கள் - மொழித்
தூய்மை கெடுத்தே இனமழிக்கக் - கண்டே
தக்க தனித்தமிழ் போற்றிடவே - நாளும்
தாளிகை தந்தார் தமிழ்நிலவே! (257)

மாத்தமிழ்ச் சங்க மதுரையிலே - கலை
மல்கும் தமிழ்ச்சங்கம் ஓங்கிடவே - கல்விச்
சாத்திரம் போற்றும்,கல் லூரிவகை - பல
சார்ந்து துணைசெய்ய நாட்டினரே! (258)

அயல் நாட்டில் கல்வியறம்

ஓடிக் கடல்தாண்டிச் செல்வமதைத் - தேடி
ஓங்கு புகழ்பல சேர்த்திடினும் - கல்வி
நாடிக் கலைபல போற்றினரே - என
நம்,நக ரத்தவர் வாழ்ந்தனரே! (259)

பர்மா மலேயா நகரத்தவர் - தமிழ்ப்
பண்பாடு, பக்தி, கலைவளர்க்கும் - நலம்
ஓர்ந்தவ ராய்ச்,செய்த கல்விப்பணி - வையம்
உள்ள வரை,நின்றே ஓங்கிடுமே! (260)

பல்கலைக் கல்விக் கழகமதை - (இ)ரங்கூன்
பட்டினம் காண நகரத்தவர் - தந்த
செல்வமே மூலம். எனஅறிந்தால் - நந்தம்
சீர்மை அறிந்து,நா மே,எழுவோம்! (261)

ஈப்போ, பினாங்கு, சுங்குரும்பை - மூவார்
என்னும் நகரில் நகரத்தவர் - தமிழ்த்
தோப்போ எனக்கல்வித் தொண்டுசெய்தார் - எனத்
தூவும் மலரிதழ் தான்,மழையோ! (262)

நாளும் அறப்பணி

நாளும் அறப்பணி செய்பவர்நாம் - ஏழை
நன்மைகள் பெற்றால் களிப்பவர்நாம் - வானக்
கோளும்,தன் போக்கினை மாற்றிடினும் - பாரிக்
கொள்கையில் மாறாக் குணத்தவர்நாம். (263)

போற்றும் சமயப் புகழ்ப்பணியும் - நாட்டின்
புன்மைகள் நீக்கும் பொதுப்பணியும் - மக்கள்
ஆற்றும் துயர்நீக்கும் ஒப்புரவும் - உயர்
அன்புப் பணியும்,நம் வாழ்க்கைநெறி. (264)

அணிசெய் கழுத்துமணிபோல்

வேளை தொறும்பிள்ளைச் சோறளிப்போம் - நோயை
வீழ்த்தும் மருந்தையும் தானளிப்போம் - இன்னும்
காளைக் கழுத்து மணியெனவே - எழில்
காட்டும் அணியாய்த் துணையிருப்போம். (265)

தண்ணீரைத் தேக்கிடும் தொட்டிகளால் - உயிர்த்
தாகத்தைத் தீர்த்து மகிழ்ந்தவர்நாம் - ஏழை
உண்ணும் உணவின்றித் தீய்வதனைக் - கஞ்சி
ஊற்றிப் பசியினைத் தீர்த்தவர்நாம். (266)

ஆதிரை மரபு

ஆதிரை, அன்றுகைப் பாத்திரத்தால் - பசி
ஆக்கும் கொடுமையை மாற்றியதாய் - இன
மாதரார், அன்னை வழியினிலே - துயர்
மாற்றும் பணியைத் தொடர்பவர்நாம். (267)

வாட்டும் சிறையினில் வாடுபவர் - மறு
வாழ்வைப் பெறவும் உதவிடுவோம் - வழி
காட்டும் புதுச்சாலை உண்டாக்குவோம் - பாலம்
கட்டிப் பிளவினை நன்றாக்குவோம். (268)

தேவை அறிந்து சுமைதாங்கியும் - நிழல்
தேடி வருமிடம் கண்டமைப்போம் - நாளும்
ஆவிற்குத் தீனி கொடுத்துவப்போம் - விலங்-
காயினும் காக்கப் பணங் கொடுப்போம். (269)

மானுட மூச்சு மகமை

தம்உழைப் பே,தரும் செல்வமதில் - தான
தர்மங்கள் செய்ய ஒருபகுதி - என
வம்புசெய் வாரின்றித் தாம்தொகுக்கும் - உயர்
வாழ்வுத் தனித்தன்மை யால்,உயர்ந்தோம்! (270)

உண்டியல் வைப்பர், பொருள்தொகுக்க - தேவை
உள்ள பொழுதே செலவழிக்க - ஞாலம்
கண்டதுண் டோ,பிறர் வாழ்விற்கெனப் - பொருள்
காக்கும் நகரத்தார் ஒப்பவரே! (271)

தெய்வப் பெயரினால் உண்டிசேர்ப்பர் - சிலர்
தேவை யெனில்,அதை யே,உடைப்பர் - பிறர்
உய்வதற் காகவே பங்கிதுதான் - என
ஒவ்வொரு நாளுமே சேர்ப்பவர்யார்? (272)

மானுட மகமை!

செந்தமிழ்க் குப்,புதுச் சொல்லளித்தோம் - அறம்
செய்வதற் கும்,மறு வாழ்வளித்தோம் - இனிச்,
சொந்த மெனல்,உயர் 'மானுடமே' - எனும்
சொல்லின் பொருளை விளங்கவைத்தோம். (273)

மானுடச் சிந்தை, 'மகமை' எனும் - ஒரு
மாற்றுப் பெயரினைக் கொள்ளவைத்தோம் - இனி
மானுடம் போற்றுவோம்! காத்திடுவோம் - எனும்
மாங்குயில் ஆகும் மகமையதே! (274)

முப்பத் திரண்டே அறங்களென - நீதி
முத்தமிழ் நூல்கள் உரைப்பவைதாம் - என்றும்
தப்பாமல் ஓங்கித் தழைப்பதற்குத் - தான
தர்மம் மகமையால் செய்பவர்நாம். (275)

'மெய்க்' காவலர்

இந்து மதத்து,மெய்க் காவலராய் - சிவ,
ஏற்ற நெறியைப் பரப்புநராய்த் - தாமே
முந்து திருக்கோயில் நற்பணிகள் - செய்த
முத்தோரைப் போற்றிப் பணிகுவமே. (276)

நந்த வனம்,அறச் சத்திரங்கள் - நால்வர்
நல்கு தமிழின் இசைப்பள்ளிகள் - பாலைத்
தந்து வளர்,பசுக் காப்பகங்கள் - கண்ட
தர்ம மனத்தரை வாழ்த்துவமே. (277)

தர்மக் கணக்கு

ஒப்ப மெனத்,தெய்வப் பேரெழுதிப் - பக்தி
ஓம்பும் நெறியென வாழ்ந்தவரைப் - போற்றிச்
செப்பிடும் ஐந்தொகை ஏட்டினிலே - தர்மம்
செய்து குறித்தாரைப் போற்றுவமே. (278)

கப்பலோட்டிய இனம்

'மீனாட்சி' என்னும் பெயர்பொலிய - கடல்
மேவிடும் பாய்மரக் கப்பலினை - ஓட்டித்
தானாட்சி செய்தார், வணிகத்திலும் - சிவம்
தானென வாழ்ந்தாரைப் போற்றுவமே. (279)

கோயில் விமானமும் மண்டபமும் - மதில்
கோபுர மும்,புதுக் கோலமுறச் - சிவ
வாயில் மதுரைச் சிறப்பினிலே - முடி
வைத்துப் புதுக்கினார் வாழியவே. (280)

அன்னையார் சாரதாம் பாள்,ஆலயம் - கல்லால்
ஆகிடச் செய்த அரும்பணியை - நாமும்,
கன்னடர் கேரளர் ஆந்திரரும் - கூடிக்
கைகூப்பிப் போற்றி வணங்குவமே. (281)

புதுமை செய்வார்

காலப் பழைமையால் ஆலயங்கள் - வீழும்
காலம் வருமுன் அதைத்தடுத்தே - அற்றைக்
கோலம் திரும்பப் புதுமைசெய்தார் - பக்திக்
கொள்கைத் திறத்தினைப் போற்றுவமே. (282)

புத்தம் புதுக்கோயில் காண்போமெனச் - சேர்த்த
பொன்... பொருள் யாவும் திருப்பணிக்கே - எனத்
தத்தம்,செய் தார்க்கெலாம் ஆலயங்கள் - மனந்
தன்னில் அமைத்து வணங்கிடுவோம்! (283)

64 ஊர்களில் புதுக் கோயில்கள்

[1]பத்தாறு நான்கூரில், செட்டிமார்தாம் - சிவப்
பற்றால் திருக்கோயில் தாமைத்தார் - பெயர்
முத்தாய், 'நகரச் சிவாலயங்கள்' - என
முன்வைத்தார் தாளைப் பணிந்திடுவோம்! (284)

கோயிலைக் கட்டிக் குளமமைத்தார் - நீரில்
கோபுரம் கண்டும் உளங்களித்தார் - இறைச்
சாயலைக் காணப்,பூந் தோட்டமதை - உடன்
சாரவைத் தாரடி போற்றுவமே. (285)

1. 10 X 6 + 4 = 64 ஊர்கள்

நாவார நால்வர்தம் பாடல்பெற்ற - தெய்வ
நற்றமிழ்க் கோயில்கள் அத்தனையும் - புத்தம்
பூவார மாகப் புதுமைசெய்தே - உயிர்
போற்றும் பணிச்செல்வர் வாழியவே! (286)

(வேறு)

ஆடும் சிவனார் சிதம்பர மும்,திரு
அண்ணா மலையும், சீர்காழியுடன் - மனம்
நாடும் குடந்தை திருவதி கை,என
நற்பணி செய்தாரை வாழ்த்துவமே! (287)

இனப்புகழ் ஏத்துவமே!

தோகை மயிலெலாம் ஆடு துறை,கச்சி
தூயவெங் காடு,செங் காடுடனே - பக்தி
ஈகையி னால்,புதுக் கோலம் பெறப்பணி
ஏற்ற இனப்புகழ் ஏத்துவமே! (288)

வீழி மிழலை,வெண் பாக்கம்,முக் கீச்வரம்
வெற்றி மதுரையாம் மாநகரம் - என்றும்
வாழி என,அலை வாழ்த்தும்,ரா மேச்வரம்
வாழ்பணி செய்தாரை வாழ்த்துவமே! (289)

-பாரதியைக் கூப்பிடு...

ஏற்ற முறு,திரு வாடானை, காளத்தி
ஏறு திருப்பரங் குன்றமுடன் - துயர்க்
கூற்றம் தகர்க்கும் இறைவாழும் கோட்டூரில்
கூடிப் பணிசெய்தார் வாழியவே! (290)

பட்டிய லிட்டுப் பகர்ந்துமே பாடிடப்
பாரதி யை,வர வேண்டுவமே - மனம்
எட்டிய மட்டும் அறிந்தே, திருப்பணி
ஏற்றவர் தம்மை வணங்குவமே! (291)

மயிலாடுதுறைத் தொடர்வண்டி நிலையம்

மாய வரம்,தொடர் வண்டி நிலையமே
மாயூர நாதர் திருக்கோயிலின் - பக்தித்
தூய பணிக்குத் துணையாய் அமைந்ததைத்
தொண்டின் பரிசெனக் கொண்டாடுவோம்! (292)

நாவுக் கரசர் கரையேறக் கண்டிட்ட
நன்னகர் பாதிரி நற்புலியூர் - நலம்
மேவு திருப்பணி, கோயில் பெறச்செய்த
மேன்மை நகரத்தர் வாழியவே! (293)

காளையார் கோயில் திருப்பணி செய்தாரைக்
கைகள் உயர்த்தியே கும்பிடுவோம் - ஏழைக்
காளி முதல்,சிறு தெய்வங்கள் ஆலயம்
காணவைத் தாரை வணங்கிடுவோம். (294)

மீனாட்சிக் கோயில் வடபுறக் கோபுரம்
மேன்மை பெறப்,பணி செய்தவர்தாம் - ஒளி
வானாட்சி செய்யும்,விண் மீன்க ளெனப்புகழ்
வாய்ந்து சிறந்திட வாழ்த்திடுவோம். (295)

முருகன் திருப்பணி

ஆறு படைவீடு யாவும் திருப்பணி
ஆற்றி, முருகன் அருள்பெறவே - வாழ்வுப்
பேறென வாழும் நகரத் தவர்,கோடிப்
பேறுகள் பெற்று வளரட்டுமே! (296)

வைணவத் திருப்பணி

செம்மை திறம்பாச் சிவநெறி போற்றுவோர்
சீர்நக ரத்தவர் தாமெனிலும் - மத
வெம்மை இலாமல் பெருமாள் திருக்கோயில்
வேண்டும் பணிசெய்தார் வாழ்த்துவமே. (297)

வாழ்க! வளர்க!!

கோயில் திருப்பணி யாவும் முறைப்படிக்
கூறிடும் வேத நெறிப்படியே - மனம்
தோயும் அறப்படிச் செய்தார் படிப்படித்
தொண்டுகள் யாவும் வளரட்டுமே! (298)

வடமாநிலத் திருப்பணிகள்

(வேறு)

காசித் திருக்கோயில் ஆளுநர்நாம் - நீதி,
காட்டி அளித்த பொறுப்பினர்நாம் - தினப்
பூசைகள் செய்ய அறக்கட்டளை - வைத்துப்
போற்றும் திருப்பணி செய்பவர்நாம். (299)

காசி விசாலாட்சிக் கோயிலுக்கு - நன்கு
கல்லால் திருப்பணி செய்துவைத்தோம் - அங்கே
தேசு மிகவே,நா கேச்வரர்க்குப் - புகழ்
தேக்கும் புதுக்கோவில் கட்டிவைத்தோம். (300)

காசி.... கயை....

காசி, கயையில்,பூந் தோட்டமுடன் - அறம்
காக்கும் திருப்பணிச் சத்திரமும் - வைத்துப்
பூசைக்குப் பூவும் நறும்பாலுமே - நாளும்
பொற்போ டளிக்க வழிவகுத்தோம். (301)

பஞ்ச வடியில், திருமுருகன் - வட
பாரதத் தார்க்கும் அருள்புரிய - புதுக்,
கொஞ்சும் எழிலில் திருக்கோயிலைப் - பக்திக்
கோல முற,நாட்டிக் காணவைத்தோம். (302)

செப்புத்திருமேனிகள்

மேவும் அயோத்தியில் பூசைபெறும் - திரு
மேனிகள் செப்பில் வடித்துவைத்தோம் - நாளும்
நாவில்,தே வாரத்தேன் சொட்டிடவே - எங்கும்
நற்றமிழ்ப் பாடல் இசைக்கவைத்தோம். (303)

கல்கத்தா சென்ற நகரத்தவர் - கூடிக்
கட்டிய தங்கும் விடுதியிலே - முதல்,
வெல்லும் முருகன்,கை வேல்நிறுத்தி - வாழ்வின்
வெற்றிநீ என்றார், நினைத்திடுவோம்! (304)

வெளிநாட்டில் திருப்பணிகள்

(வேறு) .

'கொண்டு பொருள்விற்கப் போன பிறநாட்டுக்
கோயிலைக் கட்டிய தூயர்தமை' - மனம்
கண்டு மகிழ்வோமா? கண்ட திருப்பணி
காண நினைப்போமா? வாருங்களே! (305)

தண்டாயுதபாணித் தடம்

இல்லம், மனையாளை விட்டுப் பிறநாட்டை
ஏழைமை நீக்கிட நாடியவர் - நாடிச்
செல்லும் இடத்தில் துறவிபோல் வாழ்ந்திடும்
சிந்தனை கொள்ள விரும்பினரே! (306)

தண்டா யுதபாணித் தெய்வ நினைவுதான்
தம்மை அடக்கி வழிநடத்தும் - எனக்
கண்டனர் என்பதால், காணும் இடமெல்லாம்
கைவேல் இறைக்கோயில் கட்டினரே. (307)

ஆடித் திருவிழா காணக் கொழும்புக்கும்
ஆர்க்கும்,தைப் பூசத்தைச் சிங்கையிலும் - காண
நாடி விரைவோமா? நம்நக ரத்தவர்
நற்பணி கண்டு மகிழுவோமா! (308)

தென்னிலங்கையில்....

ஈழம், இலங்கையில் எத்தனைக் கோயில்கள்
ஈகை நகரத்தார் தந்தாரெனில் - கோயில்
வேழ நிமிர்வுட னே,*ஆறு பத்தென
வேட்டு முழக்குடன் கூறுவமே. (309)

*60

ஆதிப் புகழுடன், தேவாரப் பாடல்,சீர்
ஆர்ந்த தலமெனத் தென்னிலங்கைத் - திருக்,
கேதிச் சுரத்திலும் கோண மலையிலும்
கண்ட திருப்பணி காண்குவமே! (310)

ஆறு படைவீட்டு வேலனார் பர்மாவில்
*ஆறுபத் தோடும் இரண்டாலயம் - கண்ட
வீறு மிகப்,பெரு மாள்திருக் கோயிலும்
வெற்றி மிகக்கண்டார் வாழியவே! (311)

*62

வங்காளம், தூய்மை வளர்ந்தெழும் சிங்கப்பூர்
வண்ணச் சிறுதீவு மோரியசு - ஆண்ட
இங்கிலாந் தோடு மலேயா, அமெரிக்கா
ஈசன் திருக்கோயில் காண்குவமே! (312)

பூசத் திருவிழா

சிங்கப்பூர் ஒன்றோ, மலேயா திருநாடும்
செவ்வேள்,தைப் பூசத் திருவிழாவில் - அன்பால்
பங்கைப் பிறமொழி நாட்டார் மதத்தவர்
பற்றி மகிழ்வதைக் காண்குவமே! (313)

மாரியம் மன்,கோயில் தாய்லாந் திலே,வேலன்
மாண்புடைக் கோயில் வியட்னாமிலே - ஒன்று
சேரிட மாக, இந் தோனேசி யா, நாட்டில்
செந்தில்,வேல் கோயிலைக் காண்குவமே! (314)

இரு நூற்றாண்டா...!

ஆண்டுகள் *நூறோடு நூறென வே,இறை
ஆலயம் நூறு,நூ றாமெனவே - கட்டி
யாண்டும் புகழ்வளம் காணும் நகரத்தார்
ஆற்றும் திருப்பணி ஓங்குகவே! (315)

கோயிலைக் கண்டார் குலம்வாழ்க வே,அறக்
கூறுகள் ஓம்பும் முறைவாழ்கவே! - என்றும்
தாயகம் போற்றும் மனம்வாழ்க வே,உயிர்த்
தண்டமிழ் காக்கும் திறம்வாழ்கவே! (316)

***

* நூறோடு நூறு - 200

புகழ்மாமணிகள் - (ஐ)

(வேறு)

மன்னர்,அண் ணாமலை வாழ்களன் போம்,இம
மாமலை... கங்கை எனப் புகழ்வோம்!
மன்னும் உயர்வளம் மல்கிப் பெருகியே
மாமர போங்கவே வாழ்த்துவமே! (317)

வள்ளல் அழகப்பர் வாழிய, வாழிய!
வாழ்க, கருமுத்து தியாகராசர்!
உள்ளம் மகிழ்ந்துமே பாரதி பாடிய
ஒப்பிலா *வை.சு.ச. வாழியவே! (318)

ஏந்தல் ராய.சொ வாழிய! ஏ.வி.எம்.
என்னும், மெய்யப்பர் புகழ் வாழிய!
மாந்தர் அறிவாய் மலரும் உயர்நோக்கர்
மான முருகப்பா வாழியவே! (319)

எங்கும் தமிழ்,கலை எல்லாம் தமிழெனும்
ஏற்றம் வருதற் குழைத்த நல்லார்
பொங்கு தமிழேறு வ.சுப. மாணிக்கப்
போர்மற வர்,புகழ் வாழியவே! (320)

பண்டித மாமணி யாம்,கதி ரேசனார்
பைந்தமிழ் காத்த மறவரன்றோ!
எண்டிசை வெல்லும் புகழோ டவர்,நெஞ்சம்
ஏற்ற நெறிவென்று வாழியவே! (321)

* வை. சு. ச. = வை. சு. சண்முகனார்

கம்பன் விழாக்கரு, தாயா னவன்,முதல்
கன்னித் தமிழ்க்கோயி லாயானவன்
தும்மலும் கம்பன் திருவடி வாழ்த்திடும்
தூயன் கணேசனார் வாழியவே! (322)

கம்பன் திரைப்படப் பாடல் எழுதினான்
கண்ணதா சக்கவி தன்வடிவில்
வம்பரும் போற்ற இலக்கியம் தந்தவன்
வாழிய செந்தமிழ்த் தாய்மடியில்! (323)

நூற்பதிப் பே,உயிர் நோன்பென வாழ்ந்தவன்
நோக்கம் பொருளெனும் நொய்மையிலான்
ஆற்றல்,வை. கோவிந்த னார்,புகழ் வாழிய!
அன்னவர் 'சக்தி' நெறிவாழிய! (324)

சிற்பியாம் சின்னஅண் ணாமலை வாழிய!
சீர்முல்லை முத்தையா வாழியவே!
பொற்புடை யார்,இராம சுப்பையா வாழிய!
பொன்னி *முருகு.சு. வாழியவே! (325)

காதல் அரு.ராம நாதன் புகழ்வாழ்க
கற்கண் டினோடு குமுதத்தினை
மோதும் திறனால் நிறுத்திய எஸ்.ஏ.பி
முன்னர், அண் ணாமலை வாழியவே! (326)

சுற்றுலா சென்றே உலகை அளந்தவை
சொல்லில் உலாவரச் செய்தவராம்
நற்றவ ராம்,ஏ.கே. செட்டியார் தம்புகழ்
நாளும் உலகினைச் சுற்றுகவே! (327)

* முருகு. சு. = முருகு. சுப்பிரமணியனார்

கிள்ளைகள் பாடி மகிழப், பழமெனக்
கேட்டுச் செவிகளால் உண்ண, அழ.
வள்ளியப் பா,தந்த பாடல்கள், அன்னவர்
வாழ்வென வே,புகழ் மேவுகவே! (328)

நெற்குப்பை தந்த தமிழ்நெருப் பாம்,திரு
நீறு மணக்கும்,சீர் நெற்றியராம்
நற்றமிழ் நாயகர் லெ.ப.கரு. ராம
நாதனார் தம்புகழ் வாழியவே! (329)

செட்டிநாட் டின்,வர லாற்றைத் தொகுத்துமே
செந்தமிழ்த் தாய்க்கணி செய்தவராம்
சொட்டுந்தேன் சொல்லர்,நம் 'சோமலெ' தம்புகழ்
சுற்றும் உலகினில் வாழியவே! (330)

தன்மானத் தந்தை பெரியார் நெறிகளைத்
தாங்கிய நெஞ்சர், மெ. சுந்தரனார்
தன்னே ரிலாத்,தமிழ் வாணன் புகழ்வாழ்க!
தண்ணில வென்றொளி வீசுகவே! (331)

எப்போதும் பாடும் இயற்றமிழ் மேதையார்
எண்ணிச் சுவைக்கும்,நூல் தந்தவராம்
முப்போதும் பாடுவார் முத்தப்பர் வாழிய!
முப்பினை வெல்க கவிமரபே! (332)

நாட்டர சன்,கோட்டைக் கம்பர் சமாதியில்
நாளும் திருப்பூசை செய்துவரும்
நாட்டம் குறையா மரபின ராம், ராம
நாத விழுதுகள் வாழியவே! (333)

பாவலர் ஆய்வலர் சான்றோர் பணிசெய்வார்
பைந்தமிழ் காக்கும் நெறியாளரை
ஆவலாய்ப் போற்றும்,ச. மெய்யப்பர் ஒக்கவே
அன்றிருந் தார்,புகழ் ஓங்குகவே! (334)

வாழ்க! வளர்க! வெல்க! - (ஒ)

(வேறு)

சங்க மரபினைக் கண்டஇனம் - என்றும்
சான்றோர் தொடர்புகழ் கொண்டஇனம் - பூமி
எங்கும் வணிகக் கொடிநாட்டினார்-எனும்
ஏற்ற மிகு,நேர்மைத் தொண்டரினம்! (335)

செட்டிநாட் டாரென வாழுமினம் - செட்டுச்
சிக்கனத் தாராய்ச் செழிக்குமினம் - புகார்ப்
பட்டினத் தாரெனல் நம்கதையே - சிவப்
பற்றினத் தாரெனல் நம்விதியே! (336)

வானமளக்கும்

செய்த தமிழ்ப்பணி வானமென - நந்தம்
சிந்தை ஒலிக்குமே தானமென - என்றும்
தெய்வப் பணி,உயிர் மூச்செனவே - கொண்டு
தேடி வரும்பொருள் சேர்ப்பவர்நாம்! (337)

நால்வர் *துணைவேந்த ரான,இனம் - ஒட்ட
நம்பி,ஆ னந்த நடராசனை - ஆட்ட
ஞாலத்தை வென்றிடத் தந்தஇனம் - குறள்
நல்லறம் பொங்கிட வாழுமினம்! (338)

*1. வ. சுப. மாணிக்கனார், 2. இராம-சேது நாராயணன், 3. க. நாகப்பன், 4. முத்துக்கருப்பன்.

புல்லுக்கும் நோகாமல் மெல்லஅடி - வைப்போம்
பூவை,நோ காமலே தான்பறிப்போம் - பேசும்
சொல்லுக்குள் வாய்மை வளர்ப்பவர்நாம் - தீயின்
சூட்டை அறியாக் குணத்தவர்நாம்! (339)

வையமே வாழ்த்த

கல்லையும் அன்பால் கனியவைப்போம் - இரு
கண்களைக் கொண்டே பணிய வைப்போம் - பகை
எல்லை கடந்தும் துணையளிப்போம் - வையம்
என்றும் நினைக்கும் பணிவிதைப் போம்! (340)

(வேறு)

ஐந்தொகை கண்ட நகரத்த வர்,வாழி!
அன்னை மொழியில் கணக்கெழுதும்
செந்தமிழ் வாழ்வினர் வாழி,பல் லூழியே!
செப்பு மொழியெலாம் போற்றுகவே! (341)

நம்கலை பண்பாடு நாக ரிகத்தோடும்
நந்தமிழ் நல்லிசை ஓங்கிடவே
அம்புவி எங்கணும் ஆலய நற்பணி
ஆற்றும் நகரத்தார் வாழியவே! (342)

செய்யும் தொழிலே!

செய்யும் தொழிலே இறையென, நேர்மையாய்ச்
செய்முறை ஒன்றுதான் பூசையென
மெய்யும் அறமுமே பக்தி யென,வாழும்
மேன்மை நகரத்தார் வாழியவே! (343)

செந்தமிழ்க் காக நகரத்தார் வாழிய!
செந்தமிழ் காக்கவே வாழியவே!
செந்தமி ழாகவே வாழி நகரத்தார்
செந்தமிழ் ஓங்கிட வாழியவே! (344)

பல்லாண்டு பாடுவோம்!

பல்லாண்டு பல்லாண்டு பல்லா யிரத்தாண்டு
பல்லா யிரங்கோடி நூற்றாண்டுகள்
நல்லா ரெனச்,செயல் வல்லா ரென,வாழி
நாளும் வளங்கூடி வாழியவே! (345)

மானுடம் வாழிய!

மாகதிர் மாமதி மா,நிலம் வாழிய!
மாமலை மாகலை வாழியவே!
மாகடல் மாமழை மாவளம் வாழிய!
'மாநதி, மானுடம்' வழியவே!! (346)

****



நூலாசிரியரின் துணைவி கண்மணியம்மை, தாயார் ஆண்டாளம்மை